

நாயன்மார்கள் வரலாறு - கவியாக்கம்

விசலூர் பெண்பிள்ளை

சிவோஹம் பாராயணத் தொகுப்பு

சிவார்ப்பண மஞ்சரி - 123.

அடியார்கள் அனைவரும் எம்பெருமானின் அருள்பெற அர்ப்பணிப்பு

சிவோஹம் சிவார்ப்பண ஞானம் - 2026?02/15 ஞாயிற்றுக்கிழமை

முன்னுரை

எல்லோர்க்கும் என் பணிவான வணக்கம்.

குருவருளையும், திருவருளையும் வேண்டி, வணங்கி ”அவனருளாலே அவன் தாள் வணங்கி” என்ற கூற்றுக் கேற்ப எம்பெருமானது கருணையினால் ஒரு சிறு முயற்சியாக நாயன்மார்களது சரிதத்தை கவிதை வடிவில் அளித்திருக்கிறேன். அதை அவர் திருவடியில் நன்றியோடு சமர்ப்பிக்கிறேன்.

இப் பதிவில் நாயன்மார்கள் மற்றும் தொகையடியார்கள்ஆகியோரது வாழ்வியல் மிகவும் எளிய தமிழில், எளிய நடையில் மிக மிக சுருக்கமாக தரப்பட்டுள்ளது.

இளந்தலை முறையினரும், சைவ நெறியில் ஆர்வமுள்ளவர்களும், நாயன்மார்களையும் அவர்களது ஆழ்ந்த பக்தியையும், அவர்கள் செய்த தொண்டுகள் குறித்தும் புரிந்து கொள்வதற்காகவும், அவர்களிடம் பக்தி எண்ணம் மேலோங்கச் செய்வதற்காகவும்இந்த சிறிய பதிவை செய்துள்ளேன்.

எனது குருமார்களுக்கும், எனது பெற்றோருக்கும் இதை நான் அர்ப்பணிக்கிறேன். இதை நான் எழுதுவதற்கு வித்திட்ட விசலூர் சிவத்திரு.
மணி அய்யர் அவர்களுக்கும், எனக்கு உறுதுணையாக இருந்த என் குடும்பத்தினருக்கும், என்னை ஊக்குவித்த என் உறவினர்களுக்கும், என் நண்பர்கள் யாவருக்கும் மற்றும் கணினி உதவியாளர் திருமதி. R.M சுகன்யா B.A அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிற்றம்பலம் !

நா. சாவித்திரி, M.A. B.Ed
நூலாசிரியர்.

பதிப்புரை

எல்லாம் சிவமே!

வாழ்வின் நெறிமுறைகளை வழிநடத்தும் கலைகள் என்றும் பொக்கிஷங்கலால் அலங்கரிக்கும் புண்ணிய பூமியின் புனித வழியாம் - "பக்தி"

பக்தியுடன் பயணம் என்பது கலாச்சாரத்துடனும் பவித்ர பண்புடன் கூடிய "மனத்துடனும்" தடைகளற்ற "முன்னேற்றத்துடனும்" அன்பு கலந்த "சிநேகத்துடனும்" எந்த நிலையிலும் எந்த இடத்திலும் பயணிப்பது.

அதை நடைமுறையில் வாழ்ந்து காட்டி வழி அமைத்த நாயன்மார்களாம் - அறுபத்து மூவர்

- அப்பரை வழிபட்ட அப்பூதி அடிகள்
- சிவனிடம் இருந்து சிலந்தியை அகற்றிய திருநீலநக்கர் அடிகள்
- நீரில் விளக்கேற்றிய நமிநந்தி அடிகள்
- பாலயோகியன திருஞானசம்பந்த அடிகளார்
- சிவன் அருளால் மறுபிறவி எடுத்த ஏயர்கோன் கலிக்க அடிகள்
- திருமந்திரத்தின் மூலம் திருமூலர்
- பார்வையற்ற சிவபக்தர் தண்டி அடிகள்
- சூதாடி சிவபக்தர்களுக்கு உணவளித்த மூர்க்க நாயனார்
- தியானப்பயிற்சி அளித்த சோமாசி மாற நாயனார்
- கற்களை பக்தி ஆக்கிய சாக்கி நாயனார்
- எப்போதும் உணவளித்த சிறுபுலி நாயனார்
- பிள்ளைக்கறி அளித்த சிறுதொண்ட நாயனார்

- சலவை தொழிலாளிக்கு மரியாதை அளித்த சேரமான் பெருமாள் நாயனார்
- நல்லொழுக்கத்துடன் திகழ்ந்த கனநாத நாயனார்
- சிவனால் முடிசூட்டப்பட்ட கூற்றுவ நாயனார்
- நெருப்பில் உயிர் துறந்த புகழ்சோழ நாயனார்
- அனைவரையும் அனுசரித்த நரசிங்கமுனையர்

- மீனவனாய் சிவதொண்டு செய்த அதிபத்த நாயனார்
- உதவியாளரையும் மதித்த கலிகம்ப நாயனார்
- உதிரத்தால் விளக்கேற்றிய கலிய நாயனார்
- சிவனை வஞ்சிப்பவரை வஞ்சுக்கும் சத்தி நாயனார்
- அரசைப்பதவியை துறந்த ஐயடிகள் காடவர்கோன்
- முடியை திரியாக்கிய கணம்புல்லர் நாயனார்
- தனது வெகுமதிகளை கோவிலுக்கு அர்ப்பணித்த காரி நாயனார்
- என்னப்பனுக்காக கண்ணை கொடுத்த கண்ணப்ப நாயனார்

இப்படி எல்லா நிலையிலும் பக்தியில் எல்லையற்றவர்களை பக்தியால் காலனிடமே வரம் பெற்று காவியம் படைத்த வீர மங்கையின் பெயரினைபெற்ற அம்மை (சாவித்திரி)

பக்தியை கவிதை வடிவில் காவியம் படைத்தது மிகச்சிறப்பு!

கவிஞர் சுபா மகேஷ்

பம்மல் சென்னை

அணிந்துரை

தமிழ் நாட்டில் ஏழாம் நூற்றாண்டில் பக்தி இலக்கியம் மறுமலர்ச்சி பெற்றது. அருளாளர்கள் எம்பிரான் திரு ஞான சம்பந்தரும், எம்பிரான் திருநாவுக்கரசரும் சிவபெருமானை போற்றி பல பதிகங்களை அருளியிருந்தனர். ஆயினும் அக்காலத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் வாழ்ந்த சிவனடியார்களின் பெருமைகளை பற்றி எவரும் போற்றி நூல் அருளவில்லை.

இக்குறையை நீக்க திருவுளம் கொண்ட எம்பெருமான் தன் அனுக்கத் தொண்டர் ஆலால சுந்தரரை திருநாவலூரில் அவதரிக்க செய்தார். திருமண நாளில் அவரை தடுதார் கொண்டார். திருவாரூரில் தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன். என்ற முதலடி எடுத்துக் கொடுதிட திருத்தொண்டத் தொகையை அருள செய்தார். அடியார்கள் பெருமையை பதினொரு பாடல்களில் குறிப்பாக உணர்த்திய சுந்தரர் திருத்தொண்டத் தொகையை மூலமாக கொண்ட நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி அருளினார். இவ்விரண்டையும் அடித்தளமாக கொண்டு சேக்கிழார் பிரான் திருத்தொண்டர் புராணம் விவரித்து அருளினார்.

“பூரணாத்புராணம்” என்பர் பெரியோர் சம்பூர்ணமே புராணம் ஆகும். பதினெண் புராணங்களையும் பயில வேண்டும் எனச் சேக்கிழார் பிரான் ஆளுடைய பிள்ளையார் அருள் வாக்காக சேக்கிழார் விவரிக்கிறார்”.“வேத முதல்வன்” எனும் மெய்த் திருப்பாட்டினோர் ஆதி உலகோர் இடர் நீங்கிட ஏத்த ஆகும் பாத முதலாம் ‘பதினெண்புராணங்கள்’ என்றே ஓதென்றுரை செய்தனா் யாவும் ஓதாதுணர்ந்தார்”

ஆகையால் புராணங்களைப் படித்து உய்ய வேண்டும் என்ற குறிப்பினைக் காணலாம்.

சைவர்களுக்கு மூன்று புராணங்கள் மிகவும் முக்கியமானது. அதாவது பெரிய புராணம், கந்த புராணம் திருவிளையாடல் புராணம். இதில் பெரிய புராணத்தையாவது உணர்ந்து ஒதுதல் அவசியமாகும்.

அடியார்களின் திருத்தொண்டினை விவரமாக விரிக்கும் பெரிய புராணத்தில் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் உண்டு. அவற்றைப் பொருள் உணர்ந்து அறிய தமிழ் மொழிப் புலமையும் கால அவகாசமும் வேண்டும்.

முதன்முதலில் அடியார்களின் வரலாற்றினை படிக்க விரும்புவர்களுக்கும், மாணவர்களுக்கும் சுருக்கமான ஆனால் முக்கிய கருத்துக்கள் அடங்கியநூல் மிகவும் அவசியம். அக்குறையைப் போக்க "நாயன்மார்கள் வரலாறு" உதவும் என மிகவும் நம்புகின்றேன். எளிய இனிய சந்தப் பாடல்களாக் கொண்டு ஒவ்வொரு அடியாரின் தன்மைகளையும், அவர்கள் செய்த தொண்டுகளையம் மரபுக்கவிதை நடையில் அழகாகக் கூறியிருக்கின்றார்.

நூலாசியர் உரைத்தபடி "அடியார்கள் வாழ்வியல் மிகவும் எளிய தமிழில் எளிய கவிதை நடையில் அளித்திருக்கும் சில பாடல்களைக் காண்போம்.

<u>சக்தி நாயனார்</u>

'சிவன் அடியார் இகழ்வதை காண பெற்றால். அவர் நாவை குறட்டினாலே குத்தி குதறி அரிவதனால் சக்தி நாயனார் ஆனார் என்கிறார். சிவ அடியாரை எவரேனும் இகழ்ந்தால் சத்தி நாயனார் அவர் நாவை அறுப்பார் என அனைவரும் உணர்ந்து கொள்ளலாம்.

<u>நரசிங்கமுனையரையர்</u>

"திருநீறு பூசும் எவர்தீங்கு வழி நின்றாலும் திருநீற்று மகிமையதை" உணர்ந்து தானம்யளிப்பார் என்பதை நாம் உணரலாம்.

<u>களிய நாயனார்</u>

"திரு விளக்கு பணி செய்யதம் உதிரமதை வார்த்தேற்ற வாள் எடுத்து அரியுங்கணம் வானவர் கோன் எழுந்தளி"யதைக் குறிப்பிடுகிறார்.

<u>வாயிலார் நாயனார்:</u>

"கோவிலேதும் போகாமல் மனமே தன் கோவிலென தனி வழியே கொண்டதனால்" என தன் நெஞ்சத்தையை கோயில் என்ச் கருதிய வாயிலார் பற்றி அறியலாம்.

<u>விறன் மிண்ட நாயனார்</u>

"சுந்தரனையும் ஆண்ட எம்பெருமானையும் "புறந்தள்ளு என்றுரைத்தார்"விறல் மிண்டர் இவரதனால் திருத் தொண்டர்

தொகையெனும்˙ திருப்பாவும் பிறந்ததனால்''திருப்பேறும் இவர் பெற்றுளனத் திருத் தொண்டத் தொகை உருவான காரணத்தையும் மிக அழகாக சுருக்கச் சொல்லி விவரித்துள்ளார்.

<u>திருக்குறிப்புத் தொண்டர்</u>

குறிப்புணர்ந்து பணிதலினால் குறிப்புத் தொண்டன் என மிவனே திருவடியார் துணிகளதை துவைத்தளிக்கும் தூயவனாம்'' என அவன் திருத்தொண்டை நாம் உணர வைக்கிறார்.

<u>கண்ணப்ப நாயனார்</u>


"வாயுலிங்க வலக் கண்ணில் குருதி வரக் கண்டு…அம் பொன்று அது கொண்டுஅவர் விழியை அகழ்ந்தெடுத்து அரனவர் வலக் கண்ணில …அது தனையே பொருத் தெடுத்தார்…இடக் கண்ணும் இடருங்கால் …_இடக் கண்ணும் அகழ்ந்துதெய்து''எனும் போது "கண்ணப்பா என விளித்து என் வலம் கொள்வாயென மொழிந்து சிவ கணமாய் அவராக்கி'' எனபதனால் கண்ணப்பர் உண்மை அன்பினை நாம் உணரலாம்.

<u>காரைக்கால் அம்மையார்</u>

"பெரியபுராணம் தான் பேசும் அருமையான மூவருள்ளும் முதன்மையான பெண்ணிவரே முக்கண்ணன் அம்மையரே'' "ஈசனவன் கயிலை தனை கால்களால் நடத்தலது தகுதியன்று ஒழிந்திருந்து தலையதனால் நடந்து செல்ல''மகேசனும் உள் மகிழ்ந்து "இங்கே வருகின்ற இவள்நம்மை துதிக்கின்ற அம்மை'' யென இறைவனுக்கே அம்மையாகும் தன்மையை உணர வைக்கிறார். இவ்வாறு அறுபது நாயன்மார்கள், ஒன்பது தொகை அடியார்கள் பாடிய சுந்தரார், அவரது தந்தை சடையனார், அன்னையார் இசை ஞானி ஆகிய அறுபத்து மூவரையும் எளிய இசை வடிவில் அளித்துள்ள இந்நூலைப் போற்றி உணர்ந்து மாணவர்கள் உயர்வடைய வேண்டும் என விண்ணப்பித்து, இந் நூலினை வழங்கிய ஆசிரியை அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுதல்களையும் வழங்கி மகிழ்கின்றேன்.

திருச்சிற்றம்பலம்

சி.சுந்தர மூர்த்தி
புழுதிவாக்கம் சென்னை


திருச்சிற்றம்பலம்.
"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

கவிதை வடிவில் நாயன்மார்கள்
வரலாறு எளிய நடையில்,
இரத்தின சுருக்கமாகவும், எளிய தமிழில்
எல்லோருக்கும் எளிதாக புரியும்வண்ணம்
அமைத்தது அருமை.
வெகுவாக மனப்பாடமும் ஆகும்.
"கலியுகத்திற்கு ஏற்ற கவிதை காவி
"காவியத் திலகம் சாவித்ரி";
சேக்கிழாரின் தமக்கை
கவிதை படைத்தாள்.
"கலியுக சாவித்ரி"

மண்ணின் நல் வண்ணம்
வாழலாம்.

திருமதி : **அகிலாசுரேஷ்** ஒருங்கிணைப்பாளர்
காரைக்கால் அம்மையார் தேவார்ப்பாடசாலை.பம்மல்

அணிந்துரை

(1)

சைவத்தை மேம்படுத்த, உய்யக்க எம்பெருமான் கருணை கொண்டார்.

அருளாளர்களாகிய புடமிடப்பட்ட திருநாவுக்கரசர், கருவிலே திருவுடையான திருஞானசம்பந்தர், சுந்தரர், மற்றும் மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் வழிகளில் போதித்து சைவத்தை வளர்த்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக 63 நாயன்மார்களும், தொகை அடியார்களும் சிவத்தொண்டாற்றினர்.

அடியார்களின் மாக்கதை உண்டாவதற்கு முக்கியமானவர் விறன்மிண்டர். இவர் ஆற்றிய செயல்தான் திருத்தொண்டர் தொகையும் பெரிய புராணம் பரிணமித்தது.

பெரிய புராணம் பெருங் காப்பியமாகும். ஓர் காப்பியத்திற்கு மூன்று தகுதிகள் வேண்டும். 1. தன்னிகரில்லாத் தலைவன் 2. கருப்பொருள் 3. வருணனைகள்.

இங்கு அடியார்கள் யாவரும் தலைவர்கள். எம்பெருமானின் திருத்தாளே அடையப் படவேண்டியது. என்றும் நிலையாகவும், எப்போதும் மெய்யாகவும் உள்ள எம்பொருளை வாழ்வின் பொருளாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் 63 நாயன்மார்கள்.

இறைவனுடன் தினம் உறவாடும் பழக்க வழக்கமாகும்போது, நம்மை அறியாது நம் ஆன்மா மேல் நிலைக்கு உயர்த்தப்படுகிறது.

இந்நூல் மக்களின் சிந்தையில் உள்ள இருளைப் போக்கி ஞானஒளி தந்து இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் அளித்து பேரின்ப முக்தி அளிக்கும் நூலாகும்.

சைவத் திருமுறையான பெரிய புராணத்தை முழுமையாக கற்று, தெய்வ சேக்கிழார் வழி நின்று, 63 நாயன்மார்களையும் உள்ளடக்கிய கவிதை நூலாகும்.

பெரிய புராணம் இரண்டு காண்டங்களாகவும் பதின்மூன்று சருக்கங்களாகவும், மற்றும் பாகுத்துச் செய்யுளாகவும் பாடப் பட்ட ஞான நூலை முழுமையாக கவிதை வடிவாக்கியது இந்நூலாசிரியர் அவர்களின் பெரு முயற்சியாகும். போற்றத் தக்கதாகும், பாராட்டத் தக்கதாகும்.

இக்காரியத்தை கவிதையாக சிறப்பாக யாத்து அளித்தவர் திருமதி கா. சிவாத்திரி [illegible] அவர்கள்.

'அடியார்கள் மெய்யுணர்வு பெற வேண்டும் என்பதே அவர்களது இலக்காகும்.

அவர்கள் மேலும் பல பக்தி நூல்களையும் சைவத் தொண்டினையும் தொடர்ந்து பணியாற்றி சிறப்புடன் பெற எம்பெருமான் திருவடிகளில் பிரார்த்திக்கின்றேன்.

இவண்
பொன். சுப்ரமணியம் M.A.

சிவத்திரு.**பொன் சுப்ரமணியம்** அவர்கள்
மூத்த உறுப்பினர் தேவார திருப்புகழ் சபை நங்கைநல்லூர்

INDEX PAGE

33.முனையடுவார் நாயனார்

34.கோட்புலி நாயனார்

35.நமிநந்தியடிகள்

36.உருத்திர பசுபதி நாயனார்

37.மானக் கஞ்சார நாயனார்

38.ஏயர்கோன் கலிக்காம நாயனார்

39.இளையாந்தன் குடிமாற நாயனார்

40.பெருமிழலைக் குறும்பர் நாயனார்

41.சோமாசிமாற நாயனார்

42.கூற்றுவ நாயனார்

43.தண்டியடிகள்

44.கோச்செங்கட் சோழன்

45.கழற்றறிவார் நாயனார்(அ) சேரமான் பெருமாள்

46.திருநீலநக்க நாயனார்

47.திருக்குறிப்புத் தொண்டர்

48.குங்கிலியக்கலய நாயனார்

49.திருநீல கண்ட நாயனார்

50.கண்ணப்ப நாயனார்

51.சண்டேசுவர நாயனார்

52.சிறுத்தொண்டர் நாயனார்

53.அப்பூதியடிகள்

54.அதிபத்த நாயனார்

55.நீலகண்ட யாழ்ப்பாணர் நாயனார்

56.காரைக்கால் அம்மையார்

57.திருநாவுக்கரசர்

58.திருஞானசம்பந்தர்

59.புகழ்துணை நாயனார்

60.சுந்தரமூர்த்தி நாயனார்

61.திருநாளைப்போவார்

62.பூசலார் நாயனார் மற்றும்

63.ஐயடிகள் காடவர் கோன் நாயனார்,

64.தொகையடியார்

65.மாணிக்க வாசகர்

1. சத்திநாயனார்

வளம் பொங்கும் காவிரி கண்
சோழ வளதிரு நாட்டில்
வரிஞ்சை யெனும் திரு வூரில்
வேளாண் குலமரப தனில்
அவதரி த்தார் சத்தி என்பார் !

ஈசன்மேல் உற்ற காதலி னால்
நேச மொடு நினை வுற்று
பாசப் பிணை கொண் டெய்து
பக்தி பணி செய்து வந்தார் !

எவ ரேனும் சிவன் அடியார்
இகழ் வதை காண பெற்றால்
அங் கேயே மறு கணமே
அவர் நாவை குறட்டி னாலே
குத்தி குதறி அரிவ தனால்
சத்தி நயன் என் றானார் !

சிவ னவன் அடிய வரை
எவரெ வரும் இகழா மல்
காத்து வரும் பணி யிலே
கால மெலாம் தான் கழித்து
கால கதி தான் அடைந்தார் !

திருச்சிற்றம்பலம் !

2. திருமூலர்

திருக் கயிலை திரு நகரில்
திரு நந்தித் தேவர் தம்
திற மான யோகி களுள்
திருமூலர் தான் ஒருவர்!

தென் திசையின் குறு முனியாம்
தீந் தமிழ்சொல் புலவ னுமாம்
அகத்தி யரது கேண்மை யினால்
பொதிகை மலை காண்ப தற்கு

பூவு லகம் வந்தி றங்கி
ஈசன வன் உறை விடமாம்
மாசிலா திருத் தலங் கள்
ஆசி யோடு வலம் வந்தார் !

காவிரி கண் கரை யோரம்
ஆவி னொடு கன்று றையும்
ஆவடு தண் துறைய ணைந்து
மேவி வரும் காதலி னால்
அவ் விடமே உறைந் தனராம் !

அவ்வி டந்தான் நீங்கு கையில்
ஆர ண்ய வழி யதனில்
ஆக் களின் தாம் கதறலையே
ஆர்த்து எழ கேட்ட தனால்

மேய்த்த இடை யன வன்
இறந் தமையே ஆக்களின் கண்
துய ரெனவே உணர்ந் தமையால்
ஆற்றல் பெறும் தம் உயிரை

ஆயன் உடல் புகச் செய்து
ஆயன் மூலன் வடி வாகி
ஆக் களின் துயர் துடைத்து
உரிய வரிடம் சேர்த் தனராம்

ஆயன் மனை இவர் கண்டு
நெருங்கி வரும் நேர மதில்
என குன்னே உற வில்லை
என கூறி சாத்த னூரின

பொது விடம் தான் அணைந்து
சிவ யோகம் தான் அமர்ந்தார்.
பர காயம் சென்ற பின்னே
உடல் தேடி செலும் போது

உடல் காணா நிலை கண்டு
இறைய ருளின் நிலை என்று
ஆவடு துறை தான் சென்று
திருக் கோவில் மேல் திசையில்

அரச மர நிழல தனில்
மூவாயிர ஆண்டுகள் தாம்
மே தவமே தான் புரிந்து
ஆண்டு க்கு ஒரு செயுளென

மூவா யிரம் செயுள் ஓதி
திரு மந்திரம் எனும் நூலை
திறம் படவே அருளி னரே !
நலந்தரும் ஞான யோகமென

மலர்ந்த திருமந்திர நூல தனை
மாலை மூவாயிரம் என சாத்தி
திரு மூல நாதரும் தான்
திருக் கயிலை சென்ற ணைந்தார் !

திருச்சிற்றம்பலம்!

3. நின்றசீர் நெடுமாறன்

மா நகராம் மதுரை தனை
மாட்சி யுடன் ஆண்டு வந்த
மா மன்னன் அரிகேசரி தான்
நின்ற சீர் நெடுமாறன் !

மனைவி மங்கை யுட னோடு
மந்திரி குலச் சிறையார் சேர்
மக்கள் பணி ஆற்றி னாரே
நின்ற சீர் நெடு மாறன் !

சமணர் தம் இடம் சேர்ந்து
சைவ மதை தான் துறந்து
மக்க ளையும் சமணர் தம்
வழி கொண்டு சென் றாரே!

இதைக் கண்ட மங்கை யுடன்
குலச் சிறையார் தானும் தான்
மன் னவன் மனம் திரும்ப
மாய னவன் அடி பணிந்தே
ஞான மான சம்பந்த ரவர்
மா நகரம் வரச் செய்தார் !

வந் துதித்த சம்பந்த ரும்
தந்த ஒரு திரு நீற்றால்
வந்த பிணி கூன் நீங்கி
கூன் பாண்டிய னான அவன்
நின்ற சீர் நெடுமாற னென
சைவ நெறி தான் கொண்டார் !

சைவநெறி தான் நின்று
சிவனே தன் கதி யென்று
சிவ னாக தாம் வாழ்ந்து
சிவ பதமும் உற் றாரே !

திருச்சிற்றம்பலம்!

4. மங்கையர்க்கரசியார்.

சோழ நாட்டு இள வரசி
பாண்டி யரின் பேர ரசி
மாதர் குல எழி லரசி
தேவி மங்கை எனு மரசி!

சைவ நெறி தழைத் திடவே
சமண நெறி பிடி யினின்று
தம் மரசன் மீண்டு வர
தளர் வில்லா வழி யதனில்
குலச் சிறையார் துணை கொண்டு
சம்பந்தரின் பிடி கொண்டு
திரு நீற்றின் துணை கொண்டு
மீட் டெடுத்தார் சிவ நெறிக்கு !

வரும் கேட்டை திரு நீற்றால்
வாரா மல் போக்கி யதால்
தரும நெறி காத்த தனால்
தவ சீலர் சம் பந்தர் தன்
தனிச் சிறப்பும் தான் பெற்று
இறை வனடி சேர்ந் தாரே!

திருச்சிற்றம்பலம்!

5. குலச்சிறையார்

தொன் தமிழ்ர் மதுரை யதில்
நின்ற சீர் நெடுமாற னவர்
மன்ன வரது அவை யதனில்
மதி மந்திரி ஆனவர் தாம்
மண மேல்குடி குலச் சிறையார் !

குலம் தாழ்ந்து நோக்காது
ஏழை என்றும் பார்க்காது
எல்லோ ரிலும் சிவம் ஒன்றே
என்றே சிவ நெறி கண்டார்!

பாண்டி யர் குல பேரரசி
மாற னவன் எழி லரசி
மங்கை யெனும் குல வரசி
நங்கை யொடு தான் சேர்ந்து
நின்ற சீர் நெடுமாற னவர்
சமண ரவர் திரும்பி யதை
தடுத் தாண் கொண் டிடவே

திரு ஞான தேவரை தான்
திரு மதுரை எழச் செய்தார் !

ஞான முனி தேவரும் தான்
தான் கொண்ட நீறா லே
மன் னவரின் உடல் பூசி
மந் திரமே நீறு என்று

பதிகங்கள் பல பாடி
சிவனவன் தம் அருளாலே
வெப்ப நோய் நீங்க செய்தார் !

திரு நீற்று மகிமை யினால்
தீண்ட நோய் நீங்க லாக
கூன் நோயும் நீங்க பெற்று
மன் னவனும் சிவ நெறியானார்!

மன்ன வரின் ஆணைப் படி
குலச் சிறையார் சமணர் பல
முனி வரை யும் ஒன்றிட்டு
கழு வேத்தி கலம் கண்டார் !

இவ் வாறு மங்கை உடன்
சிவநெறி தான் காத்திடவே
பர சமயம் போக் கிடவே
சிவத் தொண்டு பல ஆற்றி
சிவ கதி யும் அடைந்தாரே!

திருச்சிற்றம்பலம்!

6. சடையனார் நாயனார்

திரு நாவலூர் நகர தனில்
ஆதி சைவ குல வழியில்
சுந்த ரரை ஈன் றெடுத்த
தந்தை தான் சடைய னாரே!

இசை ஞானி உடன் சேர்ந்து
இல் லறமே நல் லறமாய்
இயல் பான வாழ்க்கை யதில்
இன்ப முமே தான் கொண்டார்!

நம்பி யெனும் சுந்த ரரை
நர சிங்க முனை யவர் தம்

நம் பித்து நல்வழி காட்ட
நல முடனே ஒப்பு வித்தார்!

இவ் வாறே சிவநெறியில்
சிவ பணி தான் ஆற்றிடவே
சுந்த ரரை ஈன்று வித்து
சிவ லோகம் எய்தி னாரே!

திருச்சிற்றம்பலம்!

7. இசை ஞானியார்

பெரிய புராணம் தான்பேசும்
அரிய தான கதைகளுள்ளும்
அரிய தற்கு அரியனவாம்
அருமையான மூன்று பெண்டிர்!

மூன்றிள்ளும் முதன்மை யராம்
முனைப்பாடி தான் கொண்ட
திருநாவல் எனும் ஊரில்
திருமணமே தான் கொண்டு

சடையாரின் இல் லாளென
இல்லறமே தான் செய்து
பதிபக்தி உடன் சேர்த்து
சிவபக்தி தான் செய்து

தர்ம வழி நின்றிடவே
கருவின் கண் வளர்சேய்க்கு
சிவ ஸ்துதி தான் கற்பித்து
சிவனவனின் அருள் பெற்று

சிவ னாரின் அம்ச மென
சுந்த ரரை தான் ஈண்டார் !
திருத் தொண்டத் தொகை பாடி
உலகை யெலாம் உய் வித்த

தெய்வ மகன் சுந்த ரரை
ஈன் றெடுத்த தெய்வத் தாய்
சிவ பதமும் அடைந் தாரே !

திருச்சிற்றப்பலம்!

8. நரசிங்கமுனையரையர்

முனைப் பாடி நாடு கண்ட
மன்னவ னாம் குறு நிலத்தான்
முனைய வராம் நர சிங்கனவன்
மாடாக திருநீற தனை
மனமே தான் கொண்டா ண்டார் !

ஆற ணிந்த சடைய வரின்
அடியவா´க்கே பணி செய்து
ஆதிரை நாள் தோறு மதில்
ஆலய மதில் அன்ன மிட்டு

அடியவர் தம் குறை தீர்க்க
அள விலா பொன் பொருளும்
அடியவர் கண் தான மிட்டு
தான் ஈன்ற செல்வ மதை

தான மென தந்த ளித்து
திரு நீறு பூசும் எவர்
தீங்கு வழி நின்றா லும்
திரு நீற்று மகிமை யதை

தேடி நின்று ஆற்றி யதால்
தீய தனை பாரா மல்
தேவர் என பாவித்து
பொன் பொருளும் தானளித்தார்!

நம்பி ஆரூர் சுந்தர ரின்
நலங் கொண்டு தான் வளர்த்த
நர சிங்க முனை யரையர்
நீறு கொண்டு பூசி யவர்

நேசங் கொண்டு அர வணைத்து
பொன் பொருளும் தான மிட்ட
போற்று தலுக் குரி யவர்
நீறு கொண்ட சிவனவன் தாம்

நீழ லையே அடைந்த னரே!

திருச்சிற்றம்பலம்!

9. சிறப்புலி நாயனார்.

பொன்னி நதி பாயுமது
திரு வாக்கூர் ஊர தனில்
இடி முழக்கம் தாழு மென
மறை முழக்கம் ஓங்கு பெறும்

வேள்விகளும், யாகங்களும்
ஓமப் புகை ஓங்கி பெறும்
ஓதிடும் அந்தணர் குலங் கண்னே
யாகம் செய்யும் அந்தணரே
சிறப்புலி தான் எனும் இவரே!
சீரிய சிந்தனை உட னோடு.
சிவமே நற் கதி யென்று
நாளும் தான் வேள்வி செய்து

நம சிவாய ஐந் தெழுத்தை
நாளும் தான் ஓதிவந்து
நீறணி ந்த அடியவர் க்கு
நாளும் தான் திருவமு தளித்து

நாட் களையே கழித் திருந்தார்!
சிவன வனும் ஓர் நாளே
ஆயிரத் தில் ஒருவன் என
அடிய வராய் தான் வந்து

அமுது செய்து அரு ளித்து
அருட் காட்சி தந்த னனே!
ஆதலி னால் ஆனந்த மென
அருட் பதவி தான் அடைந்தார்
சிறுப்புலி தான் எனு மிவரே!

திருச்சிற்றம்பலம்!

10. கலிய நாயனார்

ஓங்கு புகழ் தொண்டை நாட்டில்
பாங்குடனே வளங் கொள்ளும்
தீங் கில்லா மறையோர் வாழ்
தாங்கி யுறை ஒற்றி யூரே!

ஒற்றி யூர் வணிகச் செம்மல்
வற்றாத பக்தியின் பால்

புற் றிடங் கொண்டார் கண்
பற்றெ னவே தாங் கொண்டு

திரு விளக்கு ஏற்றி வரும்
திருத் தொண்டு தாம் செய்தார்
திரு மகனார் கலியன் என்பார் !

நாயன வர் பக்தி தனை
நாடெ ல்லாம் உணர செய்ய
நாயகன் சிவன வன் தான்
நல மில்லா வறுமை யதை
நய மாக தான ளித்தார்
நாய னாரின் வினை தீர்க்க!

நாயன ரும் வறுமையை தாம்
பெருமை யாக தான் கொண்டு
செக்கு ஓட்டி கூலி செய்து

குலத் தவர் தம் பொருள் ஈட்டி
பண்டம் பொருள் தான் விற்று
திரு விளக்கு தான் எரித்தார்!

பொரு ளீட்டும் தாம் பொருட்டு
பொருளாக தம் மனை யாளை
பொருள் பெற்று விற்பதற்கு
முடி யாமல் போன தனால்

திரு விளக்கு பணி செய்ய
தம் உதிர மதை வார்த்தேற்ற
வாள் எடுத்து அரியுங் கணம்
வானவர் கோன் எழுந்த ருளி

பெரு வாழ்வு கொண்ட ருளி
சிவ பதம் தான் தந்தாரே!

திருச்சிற்றம்பலம் !

11. கணம்புல்ல நாயனார்

வெள் ளாற்றுத் தென் கரைபால்
வேலூர் எனும் சிறு பதியில்
ஒப்பில்லா பெருங் குணத் தால்
மெய்பொருள் தாம் ஈசனென

ஒப்பில்லா தம் பெருஞ் செல்வத்தை
ஓயாத ஒளி விளக்கேற்றும்
தலை யான பணி என்று
வாழு மிந்த அடியவர் கண்

வறுமை யதை புகுத் தெடுத்து
செல்வ மதை வீழ்த்தி னரே
சிற்றம் பலஅரச னவன் !

அம்பலத் தான் ஆட லினால்
தில்லை அம்பலம் தான் அணைந்து
திரு விளக்கு தொடர்ந் தெரித்தார்!

புல் லரிந்து விலை கொடுத்து
நெய் மாறி விளக் கெரித்தார்
புல் எரித்த கணநாயன்!

புல் லும் விலை போகாது
விளக் கேற்றும் பணி நிற்க
புல் லினையே திரி யாக்கி
அணி விளக் கெரிக்க லாக

புல் லும் போதா தெனவாகி
தம் திரு முடியை திரியாக்கி
திரு விளக்கே தான் எரிக்க
திருத் தொண்டர் தேவன் அவன்

திரு வுள்ளம் தான் கொண்டு
திருப்பதம் தான் அடைந் தாரே!

திருச்சிற்றம்பலம் !

12. காரி நாயனார்

திருக் கடவூர் திருப் பதியில்
திர ளான தமிழ்ச் செறிவால்
திரு மறையே ஓதும் இவர்
சிந்தை யிலே சங்கரர் கொள்

நாவி னிலே நாமகள் சேர்
நாவி னிக்கும் கவி பாடும்
நாயனரே காரி என்பார்!

தமி ழாலே கோவை செய்து
காரிக் கோவை பெய ராலே
நூலி யற்றி தமிழி சைத்து
மூவேந் தர் நட் பிசைத்து

ஈண்ட பொருள் செல்வ மதை
ஈசனி டமே தான் சேர்த்து
திருக்கோவில் பல கட்டி
திருத் தொண்டர் பணி ஆற்றி
திர ளான நிதி அதனால்
திறம் படவே தொண் டாற்றி
தீதி ல்லா புக ழொடு
தீதி ல்லா உடம் பொடு
கயிலை மலை தான் சேர்ந்தார்!
திருச்சிற்றம்பலம் !

13. சாக்கிய நாயனார்

திருக் காஞ்சி நகர மதில்
திருச் சங்கம் எனும் ஊரில்
திருத் தொண்டர் சாக்கிய னார்
திரு மகனாய் அவதரி த்தார்!

பிறவிப் பயன் தான் பெறவே
அற நூலும் தான் பயின்று
அற நெறி தான் நின்றிடவே
அற மான சாக்கிய த்தை
மற நெறி என்றே அணைந்தார் !

பிற நெறி தான் பயின்றாலும்
மறைநூல் வழி தான் நின்று
சிவ நெறி தான் சிறப்பென்று
நிறை மனம் தான் கொண்டாரே!

சாத்திய வர் வேடந் தனில்
சித்தத் தினை சிவ மாக்கி
நித்த முமே பூசை செய்ய
கல்லினை தான் மலர் போல

சில்லி னையே பூ போல
சிவ பூஜை தான் செய்வார்!
கல் எறிந்த புத்தன் அவன்
சாக்கியனார் எனுமிவனே!

சிவ னாரும் அக மகிழ்ந்து
கல் பூஜை ஏற்ற ருளி
சிவகாட்சி தான் அருளி!
சிவ பதம் தான் அருளினரே

கல் எறிந்த புத்தன் எனும்
சாக்கியனார் இவன் தானே!

திருச்சிற்றம்பலம் !

14. வாயிலார் நாயனார்

அற் புதம் நிறை வளர்
கற் பகக் கண்ணி சேர்
பொற் பதம் போற்றி வாழ்
நற் பதி திரு மயிலையின்

சிறப்பு மிகு வேளாளர் குல
சீரிய செல் வர் தாம்
வாயி லார் எனு மிவரே!
நெஞ் சகக் கோயில் கொண்டு

நித்த மதில் பூசை செய்து
உள் ளத்தால் உணர் கொண்டு
ஊன் உடம்பே கோவி லென
உரு வேற்றிக் கொண்ட னரே!

கோவி லேதும் போகா மல்
மனமே தன் கோவி லென
தனி வழியே கொண்ட தனால்
திரு வருளும் தான் பெற்று
தவப் பயனும் தான் அடைந்தார்!

திருச்சிற்றம்பலம் !

15. கலிக்கம்ப நாயனார்

நடு நாடு கொண்ட இவ்விடம்
பெண் ணாடம் சிற்றூர் கண்
வணி கர் குல மரபதனில்
வந்து தித்தார் கலிக் கம்பர் !

திருத் தொண்டர் அடியவர் தம்
திருப் பாதம் தொழு தேத்தி
திரு வமுது விருந் தளித்து
திரவி யமும் பல அளித்து

திருத் தொண் டாற்றி வந்தார் !

அவ் வாறே பூசை செய்ய
ஓர் நாளும் வந்து நின்ற
கலிக் கம்பர் பணி யாளாய்
வந்த ணைந்த திரு வருளர்

அடியவா் தம் பாதம் தனை
நீர் சொரிய மறுத்த தன்
மனை யாளின் கரந் தனையே
கொய் தறுத்து தொண்டு செய்த

கலிக் கம்பன் காதலி னால்
கங்கை கொண்டான் களிப் புற்று
காதல் மனை கரம் சேர்த்து
கலிக் கம்பர் உடன் சேர்த்து
கலியவர் தம் புகழ் சேர்த்தார் !

திருச்சிற்றம்பலம் !

16. புகழ்சோழ நாயனார்

சோழ வள திரு நாட்டில்
சோறு டைத்த உறை யூரில்
சோழர் குள மர பதனில்
சோழ னவன் அவதரித் தான்
சோழ மன்னன் புகழ னவன் !

வீர தீர மன்ன னவன்
வீறு கொண்ட வேங்கை யவன்
விரி சடை யான் வேடனிடம்
வியப்பு மிகு பற்று கொண்டான் !

எல்லை யிலா பக்தி அதால்
நல்ல தொரு ஆட்சி செய்து
மலை நாடாம் கருவூர தனில்
உறை கின்ற சிவன வரை

உய் வித்து உள மகிழ்ந்தான்
ஊரறிய இவர் உள்ள மதை
உய் விக்க வர செய்ய
உமைய னவன் உளங் கொண்டான் !

அதிகன் எனும் அரச னவன்
திரை செலுத்தா நிலை கண்டு
மதி மந்திரி தான வனே
மாபெரும் தன் படை கொண்டு

படை யெடுத்தான் அவன் மீது
அதிகனை யும் அவர் வென்று
பொன், பொருட் கள், குவியலையும்
கொய்து வந்த தலை களையும்

கொண்டு வைத்தார் மன்ன னிடம் !
கொய்து வந்த தலை களிலே
சடை முடியார் தலை கண்டு
சிவ னடியார் சிர சொன்றை
கொய்த தொரு பாவ மென

சிவ சிரசைக் கொய்த தனால்
கொற்றவன் தான் கொடுங் கோலனென
பொற் தட்டில் தலை சுமந்து
ஐந் தெழுத்து தாம் ஜபித்து

பொற் றாமரை குளம் போல
அழற் குண்டம் தீப் பிழம்பில்
அக்கினி யின் அழல தனில்
தீப் புகுந்தார் புகழ்ச் சோழன்
திருப் பேறும் தான் அடைந்தார்!

திருச்சிற்றம்பலம் !

17. எறிபத்த நாயனார்

இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தற்கு அடியேன் !

அழகிய நகர் கரு வூரில்
புகழ்ச் சோழன் நாள தனில்
சிவ புண்ணியம் சிறப் புற்று
சிவ மாக வாழ்ந்தவர் தாம்
சிவ னவன் அவன் எறிபத்தன் !

அடியவர் அவர் இடையூறுங்கால்
அவ் விடை யூறு செய்தவரை
மழு வினால் வெட்டுதலை தம்
தொழி லாக கொண்டு ற்றார்!

சிவ பக்தன் சிவகாமன் அவர்
சிவன வற்கு சாத்த வந்த
சிந்திய பூக் கூடை யதை
சிதறச் செய்த அரசவன் யானையையும்

யானை யதன் பாகனை யும்
மழு வெறிந்து கொன்ற மையால்
எறி பத்தன் என வானான் !

புகழ்ச் சோழன் இது கேட்டு
நிகழ்ந்தது தன் தவ றென்று
தம்மையும் கொல் எனும் போது
தவறு செய்தோம் என வெண்ணி

தன்னை யே மாய்த்துக் கொள்ள
துணிந் தனனே எறி பத்தன் !

அச் சமயம் அசரீரி யதை
அங்குளோர் செவி கேட்க
அத் துணையும் அம்பலத் தானவனே
ஆடு கின்ற ஆடல் என
அறி வுற்று தெளிந் தனரே!

மறு கணமே மாண் டிருந்த
மத யானை பாக ருமே
மீண் டெழுந்து வந் தனரே!

மலிந்த வேல் மழு நம்பி
மாண் புடை எறி பத்தனவன்
மா சிலா தலைமை தனை
மா நகராம் கயிலை யிலே
மாண் புடனே பெற் றானே!

திருச்சிற்றம்பலம் !

18. அமர் நீதி நாயன்மார்

சோழ நகர் பழை யாறை
பொன்னி யது வருஞ் சோலை
பதி வணகர் குலந் தனிலே
அமர் நீதி வந் தெய்தார் !

சிந்தை முழு சிவனெ ன்று
தந்தம் செல்வம் தான மெய்தி
வந்த பெருந் தவப் பயனால்
வந்து றைவோர் இடர் களைவார் !

திரு நல்லூர் உறை இறையை
தின மும் தான் சேவித்து
திரு மடத்தார் அமுது செய்து
திரு வடியை தொழுது நின்றார் !

முக் கண்ணன் முதல்வ னவன்
மறை குல அடியவர் போல
திரு வுருவம் தான் கொண்டு
அமர் நீதி யவர் தம்மை
ஆட் கொள்ள தாம் வந்தார் !

தொண்டர் உரு தான் கொண்டு
கோவணம் திரு நீற்றுப் பை
தருப்பை என கொண்டு வந்து
திருத் தொண்டர் அமர் நீதியிடம்
தந்த ணைந்து காக்க சொல்லி
தூய்மை செய்ய அங்க கன்றார் !

கோவணம் தான் மறைத்து அருளி
தான் மறைத்த கோவணத்தை
தானே தான் திரும்ப கேட்டு
தர்க்க மிட்டார் சிவனவனே !

அது காணா நிலை கண்டு
பொருத்த ருள வேண்டி நின்று
அமர் நீதி அடியவர் முன் நிற்க
சிவனாரோ செருக் குற்று தன்

கோவணத் திற்கு நிகர் எடையில்
வேறொ ன்றை துலாத் தட்டில்
வைத்துத் தர வேண்டு மென்றார் !

அமர்நீதி நிறை போறாது
வைத்த துணி, பொன், வெள்ளி
நவமணி என்று யாவையுமே
துலாத் தட்டு தான் ஏற்ற
அது சமன் தான் ஏறாது
தாழ்ந்து போய் நின்ற துவே !

இறுதியில் துலா தட்டின் கண்
தம் மனைவி புதல்வன் என
தன்னை யுமே தட் டேற்றி
ஐந் தெழுத்தை தொழு தேத்தி
துலாத் தட்டு நேர் கண்டார் !

இதைக் கண்டு கங்கைபிரான்
இடப மோடு காட்சி யிட்டு
இளஞ் சேய் மனைவியொடு சேர்
அமர் நீதி அவரையுமே

தட்டோடு தான் ஏற்றி
பரமனவர் தானவரே
வானு லகு கொண்டு சென்றார் !

திருச்சிற்றம்பலம் !

19. மெய்பொருள் நாயனார்

மலையன் குல வழிவந்த
மன்ன வன் மெய் பொருளார்
மாதொரு பாகன் மாட்சி யினால்
மெய்ப் பொருள் சிவ வேடமென
மாசி ல்லா ஆட்சி செய்தார்!

சிவ னென்று எவர் வந்தாலும்
அவரே தான் மெய் யென்று
தவ மாக கொண்ட ருளும்
சிவத் தொண்டர் மெய் பொருளர்!

இவ் வாறு ஒழுகுங் கண்
பகை கொள்ளும் அரச னவன்
முத்த னவன் என்பவ னாம்
வல்லமை யால் மெய் பொருளை

வெல்ல முடியா தென கண்டு
வஞ்சனை கொள் மன தோடு
மெய்யெல்லாம் நீர் கொண்டு
சடைமுடியும் தான் தரித்து

ஆயுதமும் தான் மறைத்து
புத்தக முடிப்பொன்றெடுத்து
திருக்கோவிலூர் வாயில் வந்தான் !

பல வாயில் கடந்தேறி
பள்ளியறை வாசல் எய்தி
ஆகமம் தான் அரசர்க்கு
ஆற்றுவதாய் தான் கூறி

அரசனவன் அழைப்பேற்று
அரசியையும் அனுப்பிவைத்து
ஆகமம் தான் கற்பதற்கு
அரசனுமே மெய்யன்பனென
அவன் வழியே வந்தாரே!

வஞ்சகன் அந்த வேடத்தான்
புத்தகம் அவிழ்ப்பான் போல

உடைவாளும் தானெடுத்து
குத்துண்டு வீழச் செய்தான் !

காணுற்ற தத்தன் என்போன்
தீயனவன் சிறை பிடிக்க
மன்னவனும் அவன் நோக்கி
இடையூறு காணாது இவனை
நாட்டவர் வாரா காட்டிலே
விட்டொழிந்து வர சொன்னார்!

தத்தனவன் அவ்வாறே
அரசனவன் ஆணையென்று
நகர் கடந்து ஒழிந்து இருந்து
விட்டு வந்தன் கயவனையே!

உதரமது உடல் ஒழுக
அன்பொழுக நோக்கி நின்று
அம்பலத்தான் தாள் நின்று
திருநீற்று நெறி காப்பீரென

திருவாயும் மலர்ந்தருளி
திருவடி நிழல் தான் சேர்ந்தார்!
மெய்ப்பொருள் கண்ட நாயனவன் !

திருச்சிற்றம்பலம் !

20. மூர்த்தி நாயன்மார்

மாமணி மாட பாண்டிநாட்டில்
மாமதுரை நகர் தன்னில்
மாசிலா குல வணிகன்
மூர்த்திய ரவர் தோன்றினரே!

அந்திப்பிறை செஞ்சடையான்
ஆனதொரு வேட்கையினால்
ஆலவாய் எழுந்தருள் தம்
ஆண்டவனாம் சொக்கர் பிரானுக்கு
அணி சந்தன காப்பேற்றும்
பணி ஏத்தும் தருவாயில் !

கருநாடர் காவல் மன்னன்
கந்தப் பொழில் மதுரையதை
களம் கண்டு போர் இட்டு
காவலனாய் ஆகி வந்தான் !

சமணராய் வந்த மன்னன்
சைவநெறி போற்றுபவர் கண்
சிந்தை தாழ் இகழ்வுற்று
சித்ரவதை செய்து வந்தான் !

சிவத் தொண்டர் மூர்த்தியரும்
சிறப்பாக பணி செய்யும்
சீர்மிகு சந்தன காப்பேற்றும்
சீரான பணி யதனை

சூழும் வினை யாலதனை
சீர்கெட்வே இடர் செய்தார்
செருக்குற்ற சமணன் அவன் !

வன்மை செய் வஞ்சகனால்
நற்சந்தனம் தான் இன்றி
நாளுமது கழிந்த தனால்
நட்டம் புரிவார் அவர்க்கு

ற்சந்தனம் வேண்டி நின்று
நினவொன்றே அது வாகி
நீளும் தன் முழங்கையதை
நீள் வட்டப் பாறைதனில்

நரம்பு புறந் தோல் தேய
நயமாக தேய்க் குங்கால்
நட்டம் புரிவார் அவரே
நயமாக உவந் தெழுந்து

நீர் இவ்வண்ணம் செய்தமையால்
யாமே உனக்கு அருளினவென்று
மண் ஆளும் மாமன்னன்
தன் நாளும் முடியுமென

நீ யே தான் மன்னன் என
நீண்ட ஆட்சி செய்து
நீ யென் உலகு புகுமென
நீரணிந்த சடையன வன்

நிலைபெற்ற வரமதனால்
நீட்சிமிகு காட்சி யினால்
நிறை பெற்றார் இவர்தானே!
சங்கரன வர் சொல் போலே
சமண வன் உயிர் துறக்க
சிவன் அடியன் மூர்த்தியனும்
சிறப்பான முடி கொண்டான் !

சீரிய முறை ஆட்சிசெய
சடை முடியே பொன்முடியென்று
ருத்ர மாலை மணிமாலையென
வெண்ணீறே கல் பூச்சென

இவை யணிந்து அரசாளும்
மும்மையால் உலகாண்ட மூர்த்தியென
முடிவு கண்டு முத்தரானார்!

திருச்சிற்றம்பலம் !

21. விறல் மிண்ட நாயனார்

திருத்தொண்டத் தொகை உருவாக காரணமானவர்

சேரநாடு கண்டு உதித்த
வீரன் அவர் விறல்மிண்டன்
நேரில் பல சிவாலயமே
சீராக தான் சென்று

ஆருர் நகர் அதனில் தான்
ஆலய வலம் செயவந்தார்!

அவ்வாறு செய்யும் விதம்
அரூரர் சுந்தரர் தாம்
ஆலய வலம் வரும்போது
அடியார் அவர் தமரை

வணங்காது காணு ற்று
மிண்டர் இவர் செருக்குற்று
அடியார் குழு மதியாத
அவ்வடியார் சுந்தரனையும்

ஆண்ட எம்பெருமானவனையும்
"புறந்தள்ளு" என்று ரைத்தார்.

இதனாலே சுந்தரன வன்
இறை தியாகேசன வன் வேண்டி
அடியர்க்கு அடியனாகும் வரம்
அளித்தருள வேண்டியதால்

தில்லை வாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன் என
இறைவனே முதல் அடிதான்
எடுத் தாண்டு கொண்டதனால்

திருத் தொணடர் தொகை பாடி
திருவுள்ளம் களித் தனரே!

விரல் மிண்டர் இவரதனால்
திருத் தொண்டர் தொகையெனும்
திருப்பாவும் பிறந்ததனால்
திருப்பேறும் இவர் பெற்று

திருக்கயிலை நகர் தனிலே
கணநாதர் என ஆனார்!

திருச்சிற்றம்பலம் !

22. அரிவட்டாய நாயனார்

சோழரவர் காவிரிகண்
நீர்வளம் பொழிந்தருளும்
நிலமது கண் மங்கலந் தன்
தலைவர் என்பார் தாயனராம் !

செல்வந்தர் சிவனர் இவர்
செந்நெல் அரிசி யோடு
செங்கீரை மாவடு கொண்டு
சிவனவற்கு ஏற்ற தென்று
அடியவர்க்கு அமுதுசெய்வார்!

ஆடல்வல்லான் ஆடலினால்
யானை உண்ட விளாங்கனிபோல்
தூயனர் அவர் செல்வமதும்
தீர்ந்து மறைந்து போனததே!

வறுமை வாடி நின்றாலும்
கூலி செய்து நெல்லறுத்து
கூத்த பிரான உணவுக்கு
கூலி நெல் சமைத்துஎடுத்தார்!

தானும் தன் மனையவளும்
இலையுணவு செய்தருந்தி
செந்நெல் மென்கீரை உடன்
சிவனவன் அமுது செய்ய
மட்கலமே ஏந்தி சென்றார்!

செல்லுமதன் வழியின் கண்
சோர்வினால் தடுக்குற்று
நிலந்தன்னில் வீழ்ந்ததனால்

சிந்தப்பெற்ற அரிசி கண்டு

அளவில்லா தீமையினால்
அமுது செயும் பேறிலையென
அரிவாள் கொண்டு தன்கழுத்தை
அரியச் சென்றார் தாயனரே!

அப்பொழுதே அம்பலத்தான்
அங்கு எழுந்து காத்தமையால்
அச்செயல் தவிர்த்தெடுத்து
அரிந்த ஊறும் நீங்கிடவே

அரி வட்டான் என்றானார்
தாயனவன் எனும் பேரன் !

இடபரூட காட்சி செய்து
இல்லாள் அவள் தன்னோடு
இடமளித்தார் கயிலை யதில்
இறைவன் தான் தாயனற்கு!

திருச்சிற்றம்பலம் !

23. ஆனாய நாயனார்

அலை மலிந்த புலன்மங்கை ஆனாயற்கடியேன்

சோழ நாடு கண்டு வந்த
மழ நாடாம் நீர்நாட்டில்
மங்கலமாம் மூதூரில்
மன்னிய ஆயர் குலத்தினரே

மாண்புமிகு ஆன யனார்
மாசில்லா பிறப்பெடுத்தார்!

ஆநிரைகள் பல சேர்த்து
அதையும் அவர் மேய்த்தலினால்
ஆனாயர் என்றா னார்!
வேங்குழலின் ஓசை தனில்

வேதமென ஐந்தெழுத்தை
நாதமாக நல்கிடுவார்!

அவ்வாறே ஓர் கார்காலம்
ஆநிரை மேய்த்தெழுங்காலம்
சடை தொங்கும் கனிகண்டு
பூங்கொத்தே மாலை யென

கொன்றையொன்றை அவர் கண்டு
கொன்றை சூடும் வேந்தனான
கங்கை பிரான் எணவெண்ணி
சிந்தை நிறை சிவனென்று

எந்தை தெய்வம் அதுவென்று
ஐந்தெழுத்து பதிக மதை
வேங்குழலின் வேணு கானமென
வாசிக்கத் தொடங்கினனே!

அமுத குழல் இசை பெருகி
பறவை இனமதில் மருகி
ஆநிரைகள் மட்டுமின்றி
ஆடு மயில் இனங்களுமே

ஊடு செவி இசை கேட்டு
கூடி நின்றர் ஆனையரிடம் !

பணி செய்வோர் எல்லோரும்
பணி விட்டொழிந் திருந்து
பரவிய ஏழிசை கேட்டு
பாங்குடனே கூடி நின்றார்

பரமனவன் ஆநயர் கண் !
நலிவாரும்மெலிவாரும் என
நயத்தொடு ஓர் உணர்வொன்றி
சலியாத நிலை யேற்றும்

சாமகான கீத மதை
நிற்பதுவும் பறப்பதுமாய்
இசை மயமாய் மெய்யான
இறை ஜீவன் அனைத்திலுமாய்

இயற்கை யாவும் ஜீவித்த
இசைமழையாம் அது கேட்டு
இறைவன வன் ஈசனும்தான்
விடமேறி காட்சி இட்டு
இசைக்குழலின் நாத மதை
வையந்தனை வான தையும்

சேர்த்தளந்த இசையதனை
நாளும் தன் சேவிகேட்க
நாட்டமதை தான் கொண்டு
நாயன் ஆயன் அவந்தனைதாம்

நன்நாடு புகச் செய்தார்!

திருச்சிற்றம்பலம் !

24. ஏனாதி நாயனார்

சோழ நகர் சிற்றூராம்
எயினனூர் எனும் பதியில்
ஈழவர் குல தோன்றல்என
ஈசன் அவர் அடியவராய்
ஏனாதனர் அவதரித்தார்!

சோழர் படை வீரர்இவர்
வாளேத்தும் திறனதிலே
வாள்படையின் வீச்சதிலே
வான்புகழும் பெற்றமையால்

நாடி வந்த அன்பர்க்கு
வாளேந்தும் திறனுக்கு
பயிற்சிப் பள்ளிதாம் அமைத்து
போர்க்கலைகள் செய்துவித்தார்!

வாட் பயிற்சி வருவாயில்
சிவனவற்கே பணிசெய்து
சிந்தனையால் சிவமானார் !

நீறு கொண்டோன் தீதெனினும்
திருவடி தான் வணங்கிநின்று
தீர்ப்பாராம் பெரும்பகையும் !

தாய்முறை வழி அதிசூரன்
தொழில் முறை தாயம் அதை
வலியாரே கொள்வதென
போருக்கு அறைகூவிட்டான்
பெரும்வீரன் ஏனாதனையே!

ஏர்கொண்ட சிங்கமென
ஏனாதி போர்க்கோலம் பூண்டு
சேனை நின்று போர்செய்து
போர் அதனை தான்வென்று
வாள் பயிற்றும் கைகொண்டார்!

தோற்றுண்ட தீயனவன்
நித்திரையது தானின்றி
வஞ்சகத்தால் ஏனாதரை
வாகை யது தாம் கொள்ள

வாள் போரே செய்வதென
வரச் சொன்னான் ஏனாரை
வேறோரிடம் சென்று போர் செய்ய
சுற்றம் யாரும் இலாமல்தான் !

திருநீறு தாங்குபவ ரவரை
தீயவர் என பாராமல்
திருவடியார் என ஏற்கும்
ஏனாதர் அவர் மாண்பை

தெளிவுற்று தெரிந்தமையால்
தீயனவன் அதிசூரன்
திருநீறதை அணிந்தேற்றி
கேடயத்தால் அதை மறைத்து

ஏனர் அவர் போரிடுங்கால்
நீரதனை முகம் காட்டி
ஐயனவன் அடியர் என
ஏனரவன் குறிப்பெய்தி

இவர் குறிப்பின் வழி நிற்க
கேடயம் வாளதை நீக்காமல்
பழி வரும் சூரனுக்கென
கையில் வாளேந்திய நிலையதிலே
சூரன் அவன் எதிர்நின்றார்!

அக்கணமே அதி சூரனவன்
தன் எண்ணம் ஈடேற்ற
வாள் கொண்டு தலை கொய்தான்
சூர னவன் ஏனாதன் தலையை!

திரு நீற்றின் பொலிவு கண்டு
அதிசூரனை கொல்லா மலே
தாமே வெட்டுண்ட ஏனாதியவன்
ஏற்புடைய பக்தி கண்டு
ஈச னவன் சிவனும் தான்
உடன் பிரியா பேறளித்து
உயர்வான பத மளித்தார் !

திருச்சிற்றம்பலம் !

25. இடங்கழி நாயனார்

சோழர்குடி கோனாட்டில்
தலைநகர் கொடும்பாளூரில்
வேளிர் குல கொற்றனவர்
இடங்கழியாம் குறுமன்னன் !

பொன்னம்பலன் தொண்டதனை
போற்றிவரும் குலமதனில்
பெற்றதனை மரபாக
பேணி வரும் மாண்புடையன் !

சிவநெறியொடு ஆகமும்தான்
வைதீக நெறி கொண்டு
சைவ நெறி சிறப்புற்று
சீரிய வழிபாடு செய்தான் !

இவரவர் தம் ஆட்சியிலே
தவசீலர் சிவனொருவர்
திருவமுது செய்வித்து
சிவனடியர் சிறப்புவித்தார் !

அவ்வாறு செயும்நேரம்
அமுதுசெய பொருளின்றி
அவர்தானே ஒருநாளும்
படியளக்க பொருளின்றி

எப்படியோ பொருள்சேர்க்க
கள்வனைப் போல் நெல் கவர
இடங்கழியின் அரண்மனைக்குள்
களஞ்சியங்கண் சென்றாரே !

கள்வன் அவன் கவருகையில்
காவலர்கள் சிறை பிடித்து
இடங்கழியிடம் சேர்த்தனரே !
"இவர்தானா கள்வரெ"ன்று
இடங்கழியும் இனங்கண்டு
"ஏன் களவு கொண்டீர்" என
மன்னனவன் தான் கேட்க

கள்வரான அன்பரவர்
"விருந்தோம்பல் செய்விக்க
விளை நெல் தான் இல்லாது
விதை நெல் தான் கவர்ந்து வந்து

விருந்தளிப்போம் எனவெண்ணி
களஞ்சியமதை கள வித்தோம்”
என கேட்ட இடங்கழிதான்
இகழ்வான செயலெனினும்

தவறாத அவர் மாண்பால்
சிந்தை நிறை சிவனவரால்
நெஞ்சமெல்லாம் நெகிழ்ந்துற்று
தஞ்சம் வந்த சிவனவரை

விடுவித்து விடச்செய்து
பொன் பொருளும் தானளித்து
இவரே தன் களஞ்சியமென
பெருமிதமே தான் கொண்டார் !

அதிலிருந்து அம்மன்னன்
களஞ்சிய நெற்குவியலையும்
பொன் பொருள் மணிகளையும்
தடையின்றி சிவனெவரும்

எடுத்துச் செல்ல ஆணையிட்டு
உளமோடு உத்தரவிட்டான் !

சிவனடியார் கௌரவித்த
சிறு மன்னன் இடங்கழிதான்
சிவ புண்ணியம் தான் பெற்று
சிவலோகம் புகுந்தெய்தான் !

திருச்சிற்றம்பலம் !

26. இயற்பகை நாயனார்

(இல்லையே எண்ணாத இயற்பகைக்கும் அடியேன்)

பொன்னியது கூடும் துறை
புகார் எனும் பெருந்துறை
பெருவளமே தரும் துறை
சோழனவன் உறை துறை!

பூம்புகார் எனும் அதிலே
வணிக குலம் கொண்ட அவர்
பரம ஞானி யான அவர்
பாச பந்தம் இயல்புக்கு

பகையாடி இருந்ததனால்
இயற்பகையார் என்றானார்!

ஈகையதில் சிறந்த இவர்
இரந்தவர்க்கு இல்லை யென்று
இயம்பாமல் ஈன்றளிப்பார்
இல்லாளும் இந்நெறியோடு
இவரோடு இணைந்ததனால்

ஈடில்லா பக்தியதை
இறை மேல் வைத்திருந்து
இல்லறமே நல்லற மென
இறைபணி தான் செய்கலானார்!

தேவர்களின் தேவன் அவன்
திருவடியார் வேடந் தனில்
திரு உள்ளங் கொண் டெழுந்து
இயற்பகையின் இலம் கண்டார்!

வணங்கி நின்ற இயற்கையரை
வந்து தாம் யாசிப்பது
இயற்பகையின் இல்லாளென
அழைத்துப் போக வந்தோமென

பரமனவன் மொழி கேட்டு
திகைக்காத இயற்பகையார்
அச்சமேதும் கொள்ளாமல்
அழைத்துச் செல்ல ஒப்புவித்தார்!

மனையாளும் அம்மொழி கேட்டு
மறுபேச்சு ஏதின்றி மறுகணமே
வணங்கி நின்றாள் அவளே!
அடுத்து யாது செய்வதென
இயற்பகை யவன் வினவியதால்
சுற்றமது சூழாமல் மனையாளும்
தன்னையும் தான் காக்க
எல்லைவரை இவரை தாம்
துணையென்று மங்கைக்கும் தனக்குமே
வருமாறு ஏவலிட்டார் இறையனாரே!

வெகுண்டெழுந்த சொந்த மதை
இயற்பகையும் எதிர் கொள்ள
வேள், வாள் போர்தொடுத்து
சிதறி சிதைந்து போயொழிந்து
திசைக் கொரு வரென சிதறினரே!

இவ்வாறே அவர் காத்த மையால்
எல்லை தனை வந்தடைந்தார்!
திருவடியார் அவரும் தான் !

எல்லையதும் வந்ததனால்
நீ விட்டொழிந்து போகுமென
யோகியரும் தான் கூற
சரியென்றே இவரும் தான்

வந்த வழி திரும்புங்கால்
நீ வருவாய் ஓலமென
ஓலம் இட்டு தானழைத்து
யோகியரும் திரும்பழைக்க

இதோ வந்தேனென இயற்கையரும்
குரல் வந்த திசை நோக்கி
இயற்கையவர் திரும்புகையில்
வேதியர் அவர் தான் மறைய

மனைவி தனி நிற்கக் கண்டு
திகைத்து அவர் நிற்குங்கால்
அருட்பெருஞ் சோதி யென
அருள்மறையான் அவனும்தான்

உமையானே காட்சி தந்து
இன்பமுற்று வாழ்ந்த பின்னே
இறைவுலகம் புகுவீரென
மலர்ந்தருளி அவர் மறைந்தார்!

திருச்சிற்றம்பலம் !

27. முருக நாயனார்

சோழர் அவர் திருவூராம்
திருப்புகலூர் அதன் பேராம்
அந்தணர் அவர் முருகனராம்
ஞானவரம்பின் பெருந்தகையார்!

பேரின்ப வீடு பெற
பெரும்பற்று மார்க்க மென
பெருந்தேவன் அடி போற்றி
பெருந்தொண்டாற்றி வந்தார்!

வைகறை பால் எழுந்திருந்து
வெண்ணீறதை மேல் பூசி
தூய நீரினில் மூழ்கெய்தி
நறுமணம் கொள் மலர்வனமாம்

நந்தவனம் சென்றெய்தி
மந்தாரம், கொன்றை முதல்
அலரி, முல்லை, சம்பங்கியென
வகை வகையாய் பிரித்தெடுத்து

தூய மலர் இவை கொண்டு
பூமாலை தான் கோர்த்து
பஞ்சாட்சரம் அதை ஜெபித்து
பாமாலை தான் கொடுப்பார்!

சிவனவர் மடம் நிறுவி
சிறுத்தொண்டர் நீலக்கர்
சம்பந்தர் தான் சேர்ந்து
சிவ மார்க்க நெறி யருடன்
சீரிய நட்புற வாடிருந்தார்!

சம்பந்தர் பெருமணந் தனிலே
திருநல்லூர் பேரொளியில்
திருமகனவன் புகும்போது
தாமும் அவர் அடிபற்றி

பேரொளி யாம் தீயினிலே
ஜோதியென கலந்தெய்தி
ஆதிசிவன் தாள் பணிந்தார்!

திருச்சிற்றம்பலம் !

28. மூர்க்க நாயனார்

பாலாற்றின் தொண்டை நாட்டில்
வேற்காடு எனும் ஊரில்
வேளாளர் குடி மகனாய
மூர்க்கன் எனும் ஒருவர் தாம்

மாசிலா குணம் கொண்டு
மாண்பினோடு பக்தி பூண்டு
மாசிலா மணிஅவர் பால்
நேசமொடு நின்றொழுகி

நித்தமுமே விருந்தளிப்பார்!
அமுதளித்து மகிழ்ந்த பின்னே
உண்ணும் நியமம் தான் கொண்டு
போற்றுதலென பேறு கொண்டார் !

இவ்விடம் தான் ஒழுகுங்கால்
வறுமை யது வந்தாலும்
உடைமை யது விற்றேத்தி
அப்பணியே செய்த லானார் !

ஒரு வழியும் இல்லையெனில்
மறு வழியாம் சூதாடி
பொருள் ஈட்டி பணி செய்தார் !

சூதினிலே வல்ல இவர்
முதற்சூது தாம் தோற்று
பிற்சூது பலதாம் வென்று
பெரும்பொருளே ஆக்கினரே் !

சூதினால் மறுத்தார் அவரை
சுரிகை உருவிக்குத்தியதால்
நற்சூரர் மூர்க்கர் என
பெயற் பெற்றார் இவரேதாம் !

பல பதிகள் சென்றணைந்து
அங்கங்கு சூதாடி
தாம் வல்ல சூதினால்
வந்த பொருள் தீண்டாது
நாடோறும் அடியவர்க்கு
அமுதூட்டி இருந்தனரே் !

இங்ஙனமே பணி செய்து
குற்றங்கள் அது அகன்று
இவ்வுலகம் விட்டபின்னே
சிவலோகம் சென்றடைந்தார் !

திருச்சிற்றம்பலம் !

29. கணநாதர்

ஆழி சூழ் அகிலமதில்
காழி யாம் பதியதனே
அந்தணர் குல மரபதனில்
வந்துதித்த இம் மறையர்

சிந்தை முழு சிவமாக
சிவத்தொண்டு பல ஆற்றி
சிவநேசர் பலர் எவரும்
சிறப்பாக தேர்வித்து

சீர் பெரும் பணி அதுவாம்
நந்தவனம் மலர் பறிப்பு
மாலை புனைதல் திருமஞ்சனமென
பலபணிகள் நேர்செய்து

குறை களைந்து, நிறையாக்கி
திறமான தேர்ச்சி செய்தார்!

ஞானசம்பந்தமான அவர்
ஞானமான தேவனர்க்கு
சீடரென தாம் கொண்டு
திருப்பணி தாம் செய்தவரை

திருக்கயிலை தேவன வன்
திருவுள்ளம் தான் மகிழ்ந்து
திருப்பதமே தான் அருளி
திருக்கயிலை மாமலையில்

திருகணங்கள் நாதனாக்கி
திருவருள் தான் செய்தாரே!

திருச்சிற்றம்பலம் !

30. நேச நாயனார்

நேசமெனும் இறையன்பர்
தேசமான பழம்பதியில்
பாசங் கொண்டு இறைவனிடம்
நேசத்தொடு பணிசெய்தார் !

நெசவாளர் குலர் இவராம்
விசைத்தறி தான் நெய்து
இசைவான இறையன்பர்க்கு
ஈசனவர் அடியவர்க்கு

மாசில்லா ஆடையதை
நேசக்கரம் தான் கொண்டு
கோவணம் என பிறஆடைதனை
தானமென தானளித்தார் !

ஐந்தெழுத்தில் தறி நெய்து
நூலிழையில் பக்தி பின்னி
ஆடையதை புனிதமாக்கி
திருஅன்பர் அணிசெய்வார் !

இவ்வாறே அடியார் பணிதாமே
அயராது செய்த மையால்
அணி சந்திரசேகரவர்
அளவில்லா மகிழ்வுற்று
அணிகழல் தான் சேர்த்தனரே !

திருச்சிற்றம்பலம் !

31. செருத்துணை நாயனார்

சோழநாட்டு தஞ்சையதில்
பழங்குடியாம் மருகனூரில்
வேழமிகு வேளாளகுடியில்
எழுமிகு செருத்துணையார்
ஏறுபோல உதித்தனரே!

ஆரூரான் அவர் மேலே
ஆராத்காதல் கொண்டு
ஆலயத்தில் இறை பணியிட்டு
அடியார்க்கோ, அரனுக்கு(கோ)

அபச்சாரம் செய்விக்கின்
அவர்தமை தண்டித்தோ
அல்லது கண்டித்தோ செய்வித்து
துணிந்து நிற்கும் தீரனரே!

அவ்வாறே ஓர் பொழுது
நாயனரும் பூத் தொடுத்து
நாள் கழிக்கும் தருணத்தில்
நாதன் அவள் தேவியவள்

கோச்சிங்கர் பெருந்தேவி
மண்டபங்கண் மலரெடுத்து
மோந்து நுகர் பொழுதனிலே
செருத்துணை தான் செருக்குற்று

செரிவையவள் கூந்தல் ஈர்த்து
புறம் தள்ளி நிலம் தன் மேல்
மணி மூக்குதான் அரிந்தார்!

அரசி என பாராமல்
அபவாதம் செய்த வரை
அழைத்து இழுத்து மணிமூக்கு
அரிந்த அருஞ்செயலர் இவர்தானே!

தீரவிர திருத்தொண்டில்
திறம்பட்ட தீரன் இவர்
திருத்தேவன் அருளாலே
திருநாடு புகுந்தனரே!

திருச்சிற்றம்பலம் !

32. கழற்சிங்க நாயனார்

பல்லவர்கோன் கழற்சிங்கன்
பரமனவன் தாள் பணிந்து
பக்தியுடன் ஆட்சி செய்யும்
பரம சிவ நேசனவன் !

அகிலமெங்கும் உறை சிவனை
ஆருர் தனில் சேவிக்க
அன்புடைய அரசியொடு
ஆலயந்தாம் மேவினரே

ஆலய வலம் வரும்போது
பல்லவன் அவன் மாதேவி
நல்லதொரு மலர் எடுத்து
நாசியோடு நுகருங்கால்
நாயனன் செருத்துணையே
நாடி அவள் கையிழுத்து
நாசி யதை அரிந்தனனே !

அரசியவள் ஓலம் கேட்டு
அரசருமே அங்கிணைந்து
அஞ்சும் வினை யதைதான் செய்த
அற்பர் அவர் யாரென்றார்

செற்றுடைய செருத்துணையும்
அரசியரே என்றாலும்
ஈசனவர் தான் தமக்கு
அபவாதம் செய்தமையால்
அவர் மூக்கு அரிந்தோமென
கூறியதை செவி கேட்ட

காடவர் கோன் சிங்கனவன்
தொட்டு முன் எடுத்தகரமே
முன்பட துணிப்பதென்று
கட்டிய உடையாள் உருவி
தேவி செங்கை துணித்தாரன்றே !

மனையவளின் கரம் வெட்ட
துணிந்த மன்னன் நிலைகண்டு
மறுகணமே சிவனவனும்
மாதரொடு காட்சி கொண்டு

மாசிலா பக்தரவர்
மனையாளின் குறை போக்கி
மட்டற்ற மகிழ்வுடனே
மனையோடு வாழ்க என்று !
மாசிலா வாழ்வு தந்தார் !

திருச்சிற்றம்பலம் !

33. முனையடுவான் நாயனார்

எழிற் கொஞ்சும் சோழத்தில்
வயற் பொங்கும் நீரூரில்
பெயர் பெற்ற வேளாளன்
முனையடுவான் முதல்வனவன் !

பலமுனை தான் சென்று
பகைவர் அவர் தாம் வென்று
பல பொருளே சேர்த்ததனால்
முனையடுவான் என்றானார்!

வீரஞ் செறி சிவனிவரே
நடுநிலை யாய் போரிட்டு
நயக்கும் பொருள்தான் பெற்று
நயந்த நிதி அது கொண்டு

நற்றுண்டி அளித் தருளி
நாதன் தன் அடியவர்க்கு
நறுநெய், கறி, தயிர் எனவே
நற்கனியும் சேர்ந்தளிப்பார்!

போரிட்ட நிதி கொண்டு
வாளிட்ட வேல் வீரர்
பாங்குடனே பரமனவர்
பணிசெய்து ஆற்றியதால்

பரமசிவன் அவன்தானே
போர்வீரர் இவர்தனையே
பெருங்கழல் தான் சேர்த்தாரே!

திருச்சிற்றம்பலம் !

34. கோட்புலி நாயனார்

காவிரியின் ஊர்தனிலே
நாட்டியத்தான் குடிதனிலே
வீரவேளாண் மரபதிலே
கோட்புலி எனுமிவரே

சோழர்படைத் தலைவன் என
போர்ச் செயலே பல புரிந்து
போரில் வல்ல புலி என்றே
பேர் கொண்ட வீரனிவன் !

வீரம்கொள் சூரனிவன்
அரனார் அவர் இடந்தனிலே
அளவில்லா பக்தி கொண்டார்
வளமான நிதி யதையும்
மலைபோல நெல் வாங்கி
குவியலென குவித்து வைத்து
அடியவர் அவர் சேவைக்கு
அளவில்லா தான மிட்டார்!

அரசனவன் ஆணையேற்று
போர்க்களம் தான் புகும்போது
குவியலான நெல் மணிதனை
அடியவரவர் அவர் தவிர

மற்றோர் எவரெவரும்
செலவு செய்தலாகாதென
உறவினரவர் அவர் தமக்கு
உறுதியிட்டு கூறி சென்றார்!

கொடும் பஞ்சம் மேவியதால்
வாடும் உறவினரவர் தமரே
நெல் உண்டார் என அறிந்து
அபவாதம் என வெண்ணி

தாய், தந்தை, மனைவிதமை
வாள் கொண்டு வெட்டிட்டார்!

பால் மணங் கொள்
பச்சிளம் சேய அதுதனையும்
குடிக்கு ஒரே புதல்வனையும்
விட்டு வைத்து விடாமலே
வெட்டுண்டு தலை சாய்த்தார்!

சிவனவனும் உடன் தோன்றி
யாவருக்கும் சிவபதம் அருளி
மறுபிறவி கெடச் செய்து
அருட்பதமே கொண்டு ஆண்டார்!
திருச்சிற்றம்பலம் !

35. நமிநந்தியடிகள்

அழகூரும் ஆருரதனில்
அந்தணராம் வேதரிவர்
அனலிடும் வேள்வி செய்து
புனல்கங்கை மன்னனவன்
புகழ்பாடி களிப்பாராம் !

ஆரூரன் அடி பற்றி
திருத்தொண்டு தினம் ஆற்றி
திருவைந்தெழுத்து ஓதி
திருவிளக்கும் ஏற்றிடுவார்!

ஒருநாளும் அதுபோலே
அறநெறி கோவிலதில்
திருவிளக்கு தான் ஏற்ற
திருப்பணிக்கு நெய் கேட்டு

திருநந்தி போகுங்கால்
சமணர்கள் எனுமவர்கள்
நெய் மறுத்து, நீர் சேர்த்து
விளக்கெரிக்க வினவியதால்

அதுபோல செய்வீர் என
அசரீரி அது கேட்டு
திருக்குள நீரதனாலே
திருவிளக்கு பல எரித்து

திருத்தேவன் திருவருவளை
திறம்படவே நிலை நாட்டி
திருச்சமயம் சைவமென

திருவாரூரன் அவன்தானே
இவர்கொண்டு செய்வித்தான் !

இதனாலே சோழமன்னன்
பொன், பொருளும் கொடுத்துதவி
நமியவர் தான் பொறுப்பேற்று
திருப்பணி தான் ஆற்ற செய்தார்!

உத்தரவிழா அதன் தருணம்
வேற்று இன மாந்தருடன்
உலா போன நந்தியவர்
தீட்டு என அதை நினைத்து
வீடுபுகா இருக்குங்கால்
ஈசனவன் கனவெய்தி
தீண்டா திருக்க வேண்டாமென

தீண்டாமையது நோக்கும்
திருநந்தி அவரின் தன்
தீய செயலது நீக்கி
ஜாதியது நோக்காத
ஞானம் அது பெறச்செய்தார்!

மேலும் அந்த ஈசருமே
ஆருர்தன் பிறந்தவர்தாம்
ஆதிசிவன் கணங்களென
ஆரூடம் தான் சொல்ல

அடிகள் வர் இவரும்தான்
அக்காட்சி தான் கொண்டு
பேதமில்லா சிவன் என்று
போற்றி ஒழுகலாயினரே!

அப்பர் அவர் வாய்தனிலே
ஆனிப்பொன் என்றான
நமிநந்தி அடி இவரே
நற்பேறு பெற்றாரே!

திருச்சிற்றம்பலம் !

36. உருத்திர பசுபதி நாயனார்

திருக்காவிரி திருத்தலமாம்
திருத்தலையூர் எனுமூரில்
திறமான தொண்டரிவர்
திருமகனார் பசுபதியே !

திருச்சிவனார் திருவடியே
திருச்செல்வமென கொண்டு
திருஉருத்திர மந்திரமது
வழுவாது தினம் ஓதும்
அழகான தொண்டரிவர் !

தாமரையதன் தடாகத்தில்
கழுத்தளவு நீரதனில்
சிரமேல் இரு கரம்சேர்த்து
சிந்தை முழு சிவனோடு
இரவு பகல் தான் நின்று
முந்தை வினை நீங்கவென
எந்தன் வேதம் உருத்திரமென
வந்தனம் செய் ஓதிடுவார் !

வேதத்தின் கண் என்றே
வேதியர் தான் போற்றிடுமே
சாரமன உருத்திரமதை
போற்றி இவர் வாழ்தலினால்

உருத்திர பசுபதி யாமிவரை
சிற்றம்பல அரசனும் தான்
சிந்தையிலே மகிழ்வுற்று
சிவலோக வாழ்வளித்து
சிறப்பித்தார் இவர்தமையே !

திருச்சிற்றம்பலம் !

37. மானக்கஞ்சாற நாயனார்

சோழ தேச கஞ்சாறில்
வாழ்ந்த ஒரு சிவனவன்தான்
மானகாந்தன் எனும் அந்த
மானக்கஞ்சாற நாயனன்தான் !

வேளர்குடி மரபர் இவர்
வேழப்பணி செய்திருந்து
வேடனவர் பணியதிலும்
வேட்கையது கொண்டிருந்தார்!

மகேசன வன் தாள் பற்றி
மக்கட்பேறு அது வேண்டி
மலர் போன்ற மகவெய்தி
மனமகிழ்ந்தார் இவர்தானே!

மலரவள்தான் பருவங் கண்டு
திரு மகன் கலிக் காமனுடன்
மணப் பந்தல் செயும் போது
மண நாள் அது காணுங்கால்

மலையரசன் எனும் சிவனே
மாண் புள்ள அடியர் தம்மை
மகிழ் வுடனே ஆட் படுத்த
மா சிலா அந்தணன் போலே

மான ரவன் முன் தோன்றி
மணப் பெண்ணை தான் அழைத்தார்!

மனங்குளிர வாழ்த்தி அவர்
மணப்பெண்ணவள் அடர் கூந்தல்
பஞ்சவடி எனும் அந்த
விரிவு வட முடி பூணூம்

நூலதற்கு ஏற்ற தென்றார்
அதையே தான் தமக்கு
தானமென அருளும் என்றார்!

விமலன் அவன் வினவியதும்
விரைந்து வந்த நாயனரே
விருப்பமதை பெரும்பேறெண்ணி
விரிந்த குழல் தாம் அதையே
விரைவொடு அரிந் தெய்தானே!

தேவரவர் தான் மகிழ்ந்து
தேவ காட்சி தானருளி
திருக்குழலும் கொடுத்தருளி
திருமணமே நடத்துவித்தார்!

செயற்கரிய செய்த இந்த
மானக்கஞ்சன் மாண்பதனை
ஊரறிய செய்வதற்கே
உமையவனும் எழுந்தருளி

உண்மையதை உணர்த்தெய்தி
வீடுபேறு தந்த ணைந்தார் !

திருச்சிற்றம்பலம் !

38. ஏயர்கோன் கலிக்காம நாயனார்

ஏயர் குலங் கண்டுதித்த
நாயனவன் கலிக்காமன்
நாதன் அவன் சிவன்தனையே
நாட்டமென வாழ்ந்திருந்தார் !

நமசிவாய நாமம் ஓதி
நினைவெல்லாம் அது வாகி
நாட்களையே கழித்து வந்தார் !

நம்பியவன் சுந்தரனும்
நலங்கொண்ட நட்பதனால்
சித்தன் அவன் சிவனவனை
தூதன் என பரவயரிடம்
அனுப்பியது அது கேட்டு
துடுக்குற்று மனம் நொந்தார் !

தேரோடும் வீதி தனில்
துவண்ட அவர் திருவடிதான்
நோகுமென அஞ்சி நின்று
நெஞ்சுருகி நெகிழ்ந்து நின்றார் !

தேவனவன் இசைந்தாலும்
தொண்டனிவன் ஏவலனோவென்று
தீராத சினங் கொண்டு
நம்பியவன் சுந்தரர்தாம்

பெரும் பிழையே செய்தனென
இது கேட்டு தன்னுயிரும்
நீங்கா தது பிழை யென்று
துன்பக் கடல் மேவி இவர்
துயரமே கொண்டுற்றார் !

கலிக்காமர் வெஞ்சினந்தான்
கேள்வியுற்ற நம்பியவன்
கோபமது தீர வேண்டி
கோச்சடையான் தாள் பணிந்தார் !

வானவர்கோன் தானவனும்
இருவரவர் கேண்மையுற
திருவுளம் தான் கொண்டு
தீராத சூலைநோய் தனை

கலிக்காமனவர் சூழ செய்து
அவர் வருந்தி வேண்டுகையில்
”வன்றொண்டன் தீர்த்தாலன்றி
உன் சூலை தீராதென”
வழி மொழிந்தார் ஈசனவன் !

சுந்தரனார் கனவதிலும்
ஏயர் கோன் சூலையதை
”நீ சென்று தீர்ப்பாயென”
ஏவலிட்டார் நாதனவன் !

நம்பியவர் விரைந்து சென்று
சூலை நோயாற்ற வருஞ் செய்தி
கேட்ட ஏயர்கோன வனும்
”மற்றவனவன் நீக்குமுன்னே

உற்ற இவ் வயிறு கிழிப்பேனெ”ன தான்
உடை வாள் அதை எடுத்து
வயிறதை தான் கிழித்து
சூலையொடு உயிர் அதையும்
நீங்கியவன் நிலம் சரிந்தான் !

நம்பியவன் வந்தணைந்து
நிலைமை அது தான் கேட்க
உள்ள நிலை தான் மறைத்து
தீங்கில்லை ஏயர்க்கென

தொண்டர்கள் கூற கேட்டு
காண வேணும் அவரை என
வன்றொண்டர் கூறிடவே
கலிக்காமர் அவர் உடலை

அப்பொழுதே சிலர் காட்ட
சுந்தரரும் வருத்தமுற்று
”யானும் இறந்தொழிவேனெ”ன
வாளெடுத்து பற்றுங் கண்

இறைவனவர் அருளதலால்
கலிக்காமர் உயிரெழுந்து
வெட்டுங்கை தட்டி விட
இருவரும் ஒன்றெழுந்து

அன்பினால் ஒன்றிணைந்து
பிரியாத நட்புணர்வால்
திருப்புன்கூர் சிவன் போற்றி

திருத்தொண்டு பல ஆற்றி
திருவடி தான் சேர்ந்தார் !

திருச்சற்றம்பலம் !

39. இளையாந்தன் குடிமாறன்

வளம் பொங்கும் இடமான
இளையாந்தன் குடி தனிலே
இறைநேசன் மாறனவன்
வேளாள குடி பிறந்தார்!

ஏர் கொண்ட செல்வமதும்
நீர் கொண்ட வேணியவன்
பேர் கொண்ட நாமமதும்
தான் கொண்ட செல்வமென

நாள் தோறும் நீர்கொண்ட
நாதன் அவன் தாள்பற்றி
பாதம் அவன் பணிவார்க்கு
பணி செய்தல் பயனெனவே

பக்தரவர் பணிந்தேத்தி
பாத மலர் தான் தொழுது
ஆசனமும் தானுமிட்டு
அடிதொழுது அன்னமிடும்

அரியதொரு மாகேசபூஜை
ஆனந்தமாய் செய்திடுவார்!

திருவருளும் இறையருளும்
ஒருங்கிணைந்து செயலிட்டு
திருவருளில் குபேரனென
திருவருட்செல்வரானார்!

திருவருளர் இவரைதாம்
திருவுள்ளம் கொண்டருளி
திருப்பேறு தான் பெறவே

திருமகனார் சிவனார்தான்
திரு விளையாடல் அதையும் தான்
திறம்படவே செய்வித்தார்!

திரளான செல்வர் இவர்
தீர்ந்து வறுமை கொண்டாலும்

திருவருட்பணி அது தன்னை
தடையில்லா செய்து வந்தார்!

வறுமையது வந்தாலும்
தேடி வந்த அடியவர்க்கு
திருவமுது செய்விக்கும்
திருப்பணியும் செய்து வந்தார்!

அவ்வாறோர் கார்காலம்
அடைமழை தான் பெயும் நேரம்
அடியவர் என ஒருவருமே
அடர்ந்த இருள் நேரத்தில்
அங்கு வந்தார் அவரிடமே!

அடிதொழுது பணிந்தேத்தி
அன்போடு வரவேற்று
ஆசனம்தான் அமர்ந்தேத்தி
அமுது செய்யலாகு மென்றார்!

தான் பசித்திருந்தாலும்
தொண்டர் தம் பசி போக்க
துணைவியவள் துணையோடு
கழனியதன் நெல்லதனை

விதைத்த முளை நெல்லதயே
அரிசியாக்கி அடியவர்க்கு
அமுதிடலாம் என்றனரே!

கார் மழையதனில்தான்
விதை நெல்லறுத்த பின்னே
தோட்டக்கீரை பறித்தெடுத்து
அடுப்பெரிக்க வரும்நேரம்

ஈரவிறகு எரிக்க லாகாதென
"விறகெரிக்க என் செய்வேன்" என
வீட்டு கூரை கொம்பதனை
விறகாக்கி எரித்தனரே!

நெல்விதை அரிசி செய்து
கீரைஇலை கறி சமைத்து
கொம்பதனை விறகெரித்து
பதமான உணவமைத்தார்!

அமுது உண்ணும் அதுநேரம்
அடியவனர் உருமாறி

அம்பலத்தான் அரசனவன்
அருட்ஜோதினென பிழம்பாய்

ஆட்கொண்டர் அவரனையே!
தாள் பணிந்த தொண்டனரை
திருநிதியும் இறையருளும்
தான்பெற்று வாழவென்று
திருமொழியது வாய்ப்பித்து
திருமகனும் மறைந்தனரே!

திருச்சிற்றம்பலம் !

40. பெருமிழலைக் குறும்பர்

பாண்டியரின் மிழலையதில்
குறும்பர் இன குறுமன்னன்
சிவசிந்தனை செய்துற்று
சிவநேசர் சுந்தரர்பால்
சிந்தைமிகு நேசங்கொண்டார்!

சிவநாமம் தொழுதிருந்து
சுந்தரன் அவர் பேரதனையும்
செவ்வனே அவர் சேவித்து
சீரியவாறு செப்பிவந்தார்!

நம்பி யவன் அருள்பெற்றால்
நாதன் அவன் அருளுண்டென
நம்பி அவர் எந்நாளும்
நாமமதை துதித்து எழுந்தார்!

சித்தமதில் சுந்தரரை
நித்தமுமே தான் தொழுது
அஷ்டசித்தி அதுதனையே
ஆட்கொண்ட அருளாளர்!

வன் றொண்டர் நம்பியவர்
வடகயிலை அடையும்நாள்
வரப்போவது தான்கேட்டு
வன்துயரம் அவர் கொண்டு

வல்லரவர் அவர் இல்லாது
வாழ்தலது வீழ்தலென
வன்றொண்டர் வரு முதல்நாள்
வல்ல சித்தயோகர் இவர்

வரம்பெற்ற யோகத்தால்
வாயுதனை மேலெழுப்பி
வகையான சக்கரங்கள்
வலுவாக கடந்தெய்தி

வன்மையான சித்தத்தில்
கபாலமது தான் திறந்து
வாயுவது உடல் பிரிந்து
வானகரம் தான் சென்றார்!

திருச்சிற்றம்பலம் !

41. சோமாசி மாற நாயனார்

சோறுடைத்த சோழநாட்டின்
சோமநாதன் எனு மவனை
சோமயாகம் பலசெய்து
சோமாசிமாறனானார்
சோழ நாட்டு அந்தணரே !

சோம வேள்விபல செயும்
சோழ பிராமணன் தானிவரை
சோதித்து அருளினரே
சோமதேவ பெருமானே !

அத்வைத அரும்பொருளாம்
அனைத்திலும் இறை காணும்
உயர்வு தாழ்வு அது நீக்கி
உள்நோக்கும் உளவியலை

உலகினரும் உணர்வதற்கு
வேடன் தன் உருக்கொண்டு
வேதங்களும் நாய்களாக
வீதியதில் தான் வந்து

சோமாசி வேள்வியதின்
அவிர்பாகம் கொண்டருளி
விடையோடு காட்சியிட்டு
வினைப்பயனும் செய்தருளி
வீடுபேறு அருளிட்டார் !

திருச்சிற்றம்பலம் !

42. கூற்றுவ நாயனார்

வீரங்கொண்ட குறுமன்னன்
வில்தொடுத்து வேள்எடுத்து
பகைவர்க்கு கூற்றுஎனவே
ஆகி வந்த செங்கோலன்

களப்பாளர் மரபாண்டதிரு
களந்தை கூற்றவனே !

வாள் இயற்றும் வீரத்துடன்
தாள் பணியும் பற்றோடு
திருவடிதான் பற்றி
திருத்தொண்டாற்றி வந்து
திறனுடனே ஆண்டு வந்தார் !

வெற்றித் திக்கு கொண்டாலும்
வேழ சோழ மன்னரவர்
விரும்பி சூடும் மணிமகுடம்
தானும் அணிய அதுவேண்டி

தில்லை வாழ் அந்தணர்தம்
திருக்கோவில் அது வணைந்து
தருமாறு அதைக் கேட்க
அந்தணர் அவர்களுமே

சோழர் குடியது தவிர
வேற்றுகுடி மறவர்க்கு
அதை தரவே மறுத்ததனால்
முடிசூடிப் பார்ப்பதற்கு

குடியொரு தடையாவென
மடை திறந்த வெள்ளமென
மன்னரும் கண்ணீர் மல்கி
கண்ணொடுவே துயில் கொண்டார்

கனவெய்தி அம்பலவன் தான்
அவர் சென்னியதன் மேலே
திருமுடி அதுதான் சூட்டி
திருவருளும் தான் செய்தார் !

திருவடி அது முடிதாங்கி
திருத்தலங்கள் பல சென்று
திறம்படவே ஆட்சி செய்து
திருவடிதான் அடைந்தார் !

திருச்சிற்றம்பலம் !

43. தண்டியடிகள்

திருவிடங்க திருவாரூர்
திவ்யமான திருப்பதியில்
திருத்தொண்டர் தண்டியவர்
திருப்பணியில் திறம்செய்வார் !

தீராத காதலதை
தியாகேசர் மேலிட்டு
தீராத வினைப்பயனால்
தான் குருடே ஆனாலும்

தியாகனவர் திருக்குளத்தை
திருவைஞ்தெழுத்து ஓதி
திருத்தும் பணியதனை
திருவருளால் செய்திருந்தார்
செவ்வனவே செய்துவந்தார் !

சமணரவர் இடர் அதனால்
இடையூறு தான் கொண்டு
இடங்கொண்டார் இறையிடமே
இதற்கு வழியது கேட்க

இனி உன்துயர் தீருமென
இனிதாக மொழிந்தருள

இறையதுவும் உளங்கொண்டு
இறை சோழன் கனவெய்தி
தண்டியவர் இடர் களைய
ஆவனதுசெய வேணு மென்றார் !

அவ்வாறே அவர் பணிய
அடிகளரும் அவ்விடம்போந்து
அரனரவர் ஆணைப் படி
அமண ரவர் முன் நின்று

ஆனவஞ்செழுத்து ஓதி
அருங்குளமதில் மூழ்கெய்தி
அருளொளியால் கண்ணொளியே
பெறும் அவ் வேளை தனில்

அமணரவர் அருவிழிகள்
அடர்ந்திருளாய் போனதம்மா

அதன் பின்னே தண்டி யரும்
அகத்தோடு புறக் கண்ணும்

அருளோடு ஒளி வீச
அக மகிழ்ந்து தொண்டாற்றி
அருட் பதவி அடைந் தனரே !
திருச்சிற்றம்பலம் !

44. கோச்செங்கட் சோழன்

அழகோடு வளம் சேரும்
எழிலூராம் சோழ நாட்டில்
திருவானை தினம் துதிக்கும்
திருவானைக் காவல தில்

வாய்நீர் நூல் இழை யிட்டு
திருப்பந்தல் அதையே தான்
இறைவனவர் திருமுடிக்கு தினமிழைத்து
திருப்பணிந்த சிலந்தியதே

திருவருளர் அருளதனால்
திருமன்னன் சோழனராய்
திருப்பிறப்பு கொண்டனராம் !

முற்பிறப்பு உணர்வோடு
சைவநெறியது திளைத்து
சிலந்தியதன் பந்தரதை
யானை அது சிதைத்தனால்

யானை ஏறா நிலைக்கோயில்
தானும் அது பலகட்டி
திருவானைக் கோவிலதில்
வெண்ணாவல் மரங்கீழே

சிவனவர் அருள்புரிய
பெருங்கோவில் அதுவாக
பூர்வநிலை சிலந்தியென
தானுமென உணர்கொண்டு

யானைபுகா கோயிலென
பெருமாடக் கோயிலாக
பெருங்கோவில் எழச்செய்தார்!

திருமுடி அது விடுவித்து

திருத்தலங்கள் பல சென்று
திருப்பணி பல செய்வித்து
திருத்தில்லை தலத்தனிலே

திருநடனம் தரிசித்து
தில்லைவாழ் அந்தணர்க்கு
திருமாளிகை கட்டுவித்தார்!
சிவாலயம் பல கட்டி
சிவத்தொண்டு செய்வித்து
சிவநேச சோழனிவன்
சிதம்பரனார் அருளாலே
சிவபதமே பெற்றாரே!

திருச்சிற்றம்பலம் !

45. கழற்றறிவார் நாயனார் (அ) சேரமான் பெருமாள் நாயனார்

சேர னவன் கோதை யவன்
சிவ னவன் பற்ற லினால்
சிவ னவரின் கழ லோசை
சிதம் பரனார் சலங் கோசை
செவி வாய்க்கும் திற னுற்று
செவ் வனமே ஆட்சி செய்தார்!

தில்லை யவன் திரு வடியில்
திளைத் திருந்த திரு வாளர்
திருத் தொண்டன் சுந்தரனின்
திடங் கொண்ட நட்பாளர்!

சிவ னவரின் சிந்தை யுற்று
சீர் பெற்ற ஆட்சி யரே
உவர் மண் பூசிய வண்ணானை
சிவ னடியார் என வெண்ணி
சிரம் தாழ்ந்து வண க்கம்
செயும் சீர் பெரும் அடியனரே!

சுந்தரன் அவன் மேல் உற்ற
தூய பெருங் காதலி னால்
ஆடவர் கோன் சிலம்பரசன்
ஆணை யது தான் ஏற்று

ஆருரன் நம்பி யவன்
வெண் யானை அது மீதேறி
வட கயிலை யது போகுங்கால்
தானும் அவர் பின் தொடர

திரு மந்திரம் அது ஓதி
பரி தனிலே பறந்து சென்று
பர லோகம் அடைந் தனனே!

திருச்சிற்றம்பலம் !

46. திருநீல நக்க நாயனார்

பறவைகளும் வேதம் ஓதும்
பழமையான பதி யதுவாம்
சாத்த மங்கை ஊரதிலே
சீல மிக்க வேதி யராம்
நீல நக்க நாயனரே!

வேதா கமம் கற்று ணர்ந்து
வேள்வி யது தினம் புரிந்து
வேட னவர் கழல் பணியும்
வேத சீலர் இவ ரன்றோ!

திரு வாதிரை அது நேரம்
திருப் பூசை செயும் நேரம்
திரு வாளர் அவர் துணைவி
திரு மேனி லிங்க த்தில்

சுதை சிலந்தி விழும் போது
அதைத் தடுக்க ஊதுங்கால்

சிவ பூஜைக் கிடை யதுவே
அப வாதம் செய்வித் தாளென
தன் துணைவி அவர் தமையே
துறந் தோம் என துணிவுற்றார்!

ஈச னவன் கன வெய்தி
தாச னவன் மனை யவளும்
நேசங் கொண்டு ஊதி யதால்
தோஷ மேது மில்லை யென்று

திட மாக உரைத் ததனால்
இல் லாள் அவள் இலம் கொண்டார்!

இறை நேசர் இவர் தானே
இணை இல்லா பக்தி யதால்
இளவல் சம்பந்தர் உட னோடு

இடை இல்லா தொண்டாற்றி

இறை யாளர் நட் பெய்தி
இளவல் அவர் ஞான மான
சம் பந்தன் திரு மணத்தில்
வேதி யராய் இவ ரிருந்து

சிவ ஜோதி அது தனிலே
தானு மது உட் புகுந்து
திருவடி நிழ லடைந்து
திருப் பதமே தான் அடைந்தார்!

திருச்சிற்றம்பலம் !

47. திருக்குறிப்புத் தொண்டர்

தொண்டை பதி காஞ்சி யதில்
அடிய ரவர் குறிப் புணர்ந்து
அடிந்து பணி யேத்தி செயும்
ஆடையது அழுக் காற்றும்
வண்ணானாம் இத் தொண்டன் !

குறிப்புணர்ந்து பணி தலினால்
குறிப்புத் தொண்டன் எனு மிவனே
திருவடியார் துணி களதை
துவைத் தளிக்கும் தூய வனாம் !

திரு வருளும் இவ ரருளை
திடமாக சோதிக்க
திரு வடியர் ஒரு வரென
திரு வேடம் தான் பூண்டு
திரித்து தந்தான் கந்த லதை !

துவைத்த அதை காய் வதற்கு
மழை மேகம் சூழ்ந்த தனால்
முடியாமல் போன துமே
சொல் காக்க மறந்தே னென

கல் மீது தலை மோதி
தன் னுயிரை விடும் நேரம்
மன் னுயிர் வாழ் மசேகனுமே
மாசற்ற தொண்ட னவன்

மாண் பினையே கண் டெய்தி
மா சிலா வாழ் வதையே
மா றனவன் பரி சளித்தார் !

திருச்சிற்றம்பலம் !

48. குங்கிலியக் கலயனார்

கட வூரெனும் ஊர தனில்
கல யனார் எனும் வேதியரே
கங்கை யணி வேந்த ரவர்
காலனை கால் உதைத் தவரை
கழற் பாதம் தொழு பவராம் !

தூய மணம் கமழு மது
தூய மான குங்கலிய மதை
தூய நிறை பற்றோடு
தூபப் பணி செய்திருந்தார்!

தூய னவன் ஈச னுமே
குங்க லியர் இவரை தான்
குவலயம் தான் போற்றி டவே
குறை யான வறுமை யதை
கொடுத் தளித்தார் பரிசாக!

கோரமான வறுமையிலும்
குடும்பமது வாடினுமே
பசிப் பிணி யெனு மதனால்
மனைவி மக்கள் வீழ்ந்தாலும

தான் கொண்ட குங்கலிய
தூப மேற்றும் பணி யதனை
தடை யின்றி செய் வித்தார்
மங்கை யவள் மாங்கல்யம்

மங்கல நாண் அது விற்று
மங்கள நாத னவன் கோவில்
குங்க லிய பணி செய்ததனால்
குறை விலா குணக் கோமான்

கண நாதன் அரு ளாலே
குறை விலா செல்வ மது
நிறை வாக தான் பெற்றார்!

திருப் பனந்தாள் சிவ தலத்தின்
திரு செஞ்சடையர் எனு மவரே
தாடகை யவள் மாலை யேற்க
தலை குனிந்த சிவன ரவர்

குங் கலியர் இவர் வேண்ட
தலை நிமிர்ந்து தான் நின்றார் !

பூங் கயிற்றை தான் கட்டி
பூவை யரின் சிரசு தனை
பூட்டி அதை நேர் நிறுத்தும்
பெரும் பேறு பெற்ற இவர்தானே
பெருமானார் நிழல் அடைந்தார் !

திருச்சிற்றம்பலம் !

49. திருநீல கண்டர்

தில்லை கண்ட குயவ னிவன்
திரு நீல கண்டன் எனுமிவன்
திரு நடனம் புரிபவர் கண்
தீராத பற்று டையவன் !

நஞ் சுண்ட கண்ட னவர்
நாம மதை நாள் தோறும்
நா தொழுதேத்தியதால்
நீல கண்டன் என் றானார்!

ஊழ் வினையது உறுத்தி வர
உமை பாகன் உள நேசன்
தாழ் வான சித்த மதில்
தாதிய ரவர் இடம் சேர்ந்து
கூடல் இன்பம் தான் கொண்டார்!

கூடல் கொண்ட தலைவன் மேல்
ஊடல் கொண்ட தலைவி யிவள்
கோபம் அது தான் கொண்டு
தீண்டல் அது கூடா தென

நீல கண்டம் மேல் ஆணையென
நேரிழை யாள் சொல கேட்டு
தானு மதை விட் டொழிந்து
தவக் கோலம் தான் பூண்டார்!

தூய அந்த வேணிர் பிரான்
சாது வென வேடங் கொண்டு
திரு வோடு அது தாங்கி
தெரு வோடு நடந்து வந்து

சிறு குயவன் இவரி டமே
பாது காத்து வைக்கச் சொல்லி
அங்கி ருந்து சென்ற ணைந்தார்!

சில நாளது கழிந்தி ருந்து
சிவனவர் திரு வோட்டை
சிவ நேசரிடம் அவர் கேட்க
அது மறைந்து போன தனால்

சீற்றங் கொண்ட செஞ் சடையன்
திருடன் நீலகண்டன் என
வழக்கு மன்றம் செல்வதற்கு
ஏற்ற மிகு தில்லை யதில்

பற்று மிகு அந்தணர் முன்
பொற்றாமரை தடாகத்தில்
மனை யவளின் கரம் பிடித்து
மூழ் கெழுந்து சத்திய த்தால்

முறி யடித்தால் தானு மதை
ஏற்பே னென யோகிய ரவர்
கூறிய தால் வேறு வழியின்றி
கழி ஒன்றின் துணை யோடு

இருவ ரிவர் மூழ் கெய்தி
இணை யாக எழும் போது
முதுமை யது தான் களைந்து
இளமை யது தான் பெற்று
இளஞ் ஜோடி போல் எழுந்தர் !

சாது அவர் தான் மறைந்து
மாத ருடன் காட்சி தந்து
இளமை மாறா வாழ் வதனை
இரு வர்க்கும் அளித் தருளி

இன்ப முடன் வாழ்க வென்று
இறை யருளும் தான ளித்து
ஈச னவன் ஆசி யிட்டார்!

திருச்சிற்றம்பலம் !

50. கண்ணப்ப நாயனார்

வேடர் குல திண்ணன் இவன்
உடுப்பூர் வாழ் வேட னிவன்
வேட்டைக் கது போகுங் கால்
வராகமது பின் தொடர்ந்து

வளமான கா னகம் சூழ்
காளாத்தி மலை யதுவே
காடன் மாடன் தோழருடன்
காடு மலை கடந்து வந்தார்!

பூர்வ ஜென்ம உணர் வாலே
காளாத்தி குன் றுரையும்
குடுமி தேவர் எனு மவர்பால்
உடும்பான உணர் வெய்தி
வலுவான பாசங் கொண்டார்!

நீங் காத காதல் கொண்டு
நிலந் தனில் அவர் வீழ்ந்து
அன்று முதல் தினந் தோறும்
உமிழ் நீரது மஞ் சனமாய்

ஊன் இறைச்சி அமுதமு மாய்
வேட்டுவ முறை யதனில் தான்
வேட னிவர் பூசை செய்தார்!

காலை யதில் வேட்டை யாடி
பூசை செய்து அமு தூட்டி
மாலை யதில் சிவன வர்க்கு
காவ லனாய் தான் நின்றார்

அந்தணர் அவர் சிவ கோசர்
ஆகம விதி யதால் பூஜிக்கும்
அருளாளர் அவரிடந் தான்
அரன ரவர் கன வெய்தி

திண்ண னிவன் பூசை செயும்
திவ்ய மதை காட்சி கொள்ள
திரு வருளர் ஆணை யிட்டார்!

அவ்வாறே ஆறாம் நாள திலே
அந்தண ரும் வந்தெய்தி
திண்ணன் நோக்கா திசை சென்று
தொண்டர் பூசை யது நோக்க

திண்ண னார் எனு மிவரே
வாயு லிங்க வலக் கண்ணில்
குருதி அது வரக் கண்டு
அடங்காத குருதி பொங்க

அது அடங்க வழி தேடி
அது எதுவும் புலனாது
அம் பொன்று அது கொண்டு
அவர் விழியை அகழ்ந் தெடுத்து

அர னவர் வலக் கண்ணில்
அது தனையே பொருத் தெடுத்தார்!

இடது கண்ணும் இடருங் கால்
வலது கண் அது போல
குருதி வழிந் தோடுங் கால்
சிறிதளவும் நோகாது தன்

இடக் கண்ணும் அகழ்ந் தெய்து
இலிங்கத்தின் இடக் கண்ணாய்
இருத்தி விடும் இந் நிலைகண்டு
இறை வனரே அதை தடுத்து

கண் ணப்பா என விளித்து
என் வலம் கொள்வாயென மொழிந்து
சிவ கணமாய் அவ ராக்கி
சிவ பதமே அருளி னரே!

அந்தணரும் அது கண்டு
அதி சயித்து போயினரே!

முற் பிறவி பார்த்தன் இவன்
சிவ நேசன் அர்ச்சுனன் தான்
இப் பிறவி திண்ண னென
சிவ னாலே ஆட்கொண்ட

திண் ணன் இந்த வேடனிவன்
தன் னொப்பார் இல்லப்பன்
எனும் கண்ணப்பன் ஆனானே!

திருச்சிற்றம்பலம் !

51. சண்டேசுவர நாயனார்

பொன்னி பொய்க்கா ஓடும்
மன்னி யாற்று சேய்ஞ லூரில்
அந்தணன் விசார சருமன்
சிந்தை மிகு சிவனென்றே
வந்தனம் தான் செய்வாரே!

ஆநிரை அது மேலுற்ற
அளவில்லா அன் பதனால்
அந்தணர் குல இளவலிவன்
ஆநிரையது மேய்த்த லானான் !

ஆவின மது மேய்க் குங்கால்
ஆவினத்தின் பால தனை
அன்புற்று பொழி வதனால்
ஆயர் அந்தணர் இவரும் தான்

அரனர வர் பூசை செய்ய
அதைக் கொள்ள தான் எண்ணி

மண்ணிய தன் நீர் கரையில்
மணலாலே கோயில் செய்து
மதிற் சுவரும் கொண் டெழுப்பி
மாற னவர் லிங்க ரையே
மாண் புடனே ஸ்தா பித்தார்!

ஆநிரையின் பால தனால்
திரு மஞ்சனம் செய் வித்து
அந்தணர் குல மரபதனில்
ஆவனவே செய்திடுவார்!

இவ்வாறு தினம் செய்து
இறை வனது சிந் தனையில்
இன்ப முற்று களித் திருந்து
இறை நெறியில் இருந் தனரே!

இச் செய்தி கேள்வி யுற்று
விசார னவன் தந்தை யவர்
எச் சத்தன் என் பானார்
எல்லை யில்லா கோபங் கொண்டு

விசார னிவன் பூசை செயுங்கால்
கோல் கொண்டு தாக்கி யே
கொடுமைகள் செய்தாரே!

சிவ பூஜைக்கு இடையூறென
திரு மஞ்சன குடப் பாலை
காலி ட்டு உதைத் ததனால்
சிவ அபவாதம் செய் வித்த

நெறி தவறியது தம் தந்தையே
என்றாலும் சிவ குற்றம் என்றெண்ணி
சிவ நிந்தனை செய்த அந்த
தந்தை யான அந்த ணரை

மழு வெறிந்து எய்து கொன்று
சிவ பூஜை யது தொடர்ந்தார்!

அரனாரும் அவர் முன் னெழுந்து
அளவற்ற பக்தி யதால்
அன்பான தந்தை யரை
அவருமே கொன்ற தனால்

யாமே உன் தந்தை யென
சிவ னாரும் வழி மொழிந்து

சிவனே அவன் தந்தை யாகி
சிவ பதவி தான் அளித்து
சண்டேசர் எனும் பதவி
சிறப்பாக அது வளித்து
சிவ கணமாய் ஆக்கினரே!

திருச்சிற்றம்பலம் !

52. சிறுத்தொண்டர்

சிறுத்தொண்டன் பரஞ்சோதி
பாசம் பரஞ் சோதிக்கென
பரமனவன் தாள் போற்றி
பல்லவ னவன் அவை தனிலே

போர் தொழிலே செய் வித்து
திருச் செங்காட்டாங் குடி தனிலே
செவ்வனமே வாழ்ந்திருந்தார் !

பல்லவன் அவன் படை யினிலே
படைத் தளபதி இவர் தாமே
போர் முனை தான் பல நின்று
புகழ் பெற்ற வாதாபி யதை

வாகை சூடி வந் தெய்து
பொன் பொருளு மாற்றி வந்தார் !

பல்லவன் அவன் உளம் நெகிழ்ந்து
பரமசிவ அடிய வரை
போர்க்களம் இனி புகா திருந்து
பக்தி யதில் பணிய செய்தார் !

பரஞ்சோதி எனு மிவரே
பரமேசன் அடி யவர்க்கு
பொன் பொருளும் ஆற்றி வந்து
நல்ல முதும் செய் வித்து
அதன் பிறகே தான் உண்பார் !

திருவெண் காட்டு நங்கை யரை
திரு மணமே செய்து இவரும்
திரு மகனாய் சீரா ளனை
தவமகனாய் பெற்றெடுத்தார் !

அவ்வாறே ஓர் நாளும்
பைரவ சிவன் எனு மொருவர்
பரஞ் சோதி இலம் கண்டு
பசு உணவு ஒன்றனையே
உண வருந்த லாகு மென்றார் !

"அது உன்னாலாகா"தென அவர் மொழிய
அடியாரவர் பசி தீர்க்க
"எதுவும் யாம் செய்வோ" மென
இவரும் தான் மொழிந் திடவே

நரபசு தான் வேணு மென்றும்
ஐந்து அகவை கொண்டுள்ள
ஓர் குடிக்கு ஒன்றென்ற
தாய்க்கு ஓர் பிள்ளையென

தலைச்சன் பிள்ளை யானவனை
தாய் பிடிக்க தந்தையவர்
அரிந்து தரும் தலைக்கறி
தான் விருந்தெனவே தமக்களிக்க
வேண்டு மென்றார் சித்தனரே !

சிறு தொண்டர் இவர் தாமே
திருவடி யவர் உளம் நோகாது
பிள்ளைக் கறியது சமைக்க
பிறழ்வின்றி உளம் செய்தார் !

மனையாளும் அவர் சேர்ந்து
மகிழ்வுடனே தம் மகனான
சீராளன் எனு மவனை
சீர் செய்து குளிப்பாட்டி

சித்தனவன் அடியவர்க்கு
சிறப்பான உணவதற்கு
சீராளன் அவன் உடலரிந்து
தலைக்கறி அது சமைத்து

திருத்தொண்டர் அமுது செய்ய
திரு வமுது படைக்குங் கால்
"நாந் தனியே உண்ணோம்" என
"உமக்கு புத்திரன் உண்டேன் எனில்

நம்முடன் சேர்ந்து உண்ண
அவனையும் இங்கு அழையும்"
எனும் மொழியது கேட்டு

சிறுத் தொண்டன் அவரும் தான்
"உடன் அவன் வந்தாற்றான்
நாம் உண்போம்" என்றிடவே
"தேடி அழையும" என மொழிய

தொண்டரும் நங்கையுந்தான்
புறஞ் சென்று "சீராளா வா" வெனவே
சீராளன் அவன் தானே
புயலெனவே புகுந்து வந்தான் !

சிறுபையன் வந்ததுமே
பயிரவ சித்தனவன்
பரஞ்சோதி அதுவாகி
உமைபாலன் வேலனொடு
விடையோடு காட்சி தந்தார் !

பிள்ளைக் கறியது சமைத்த
பேராளன் நீயும் தான்
பெருவாழ்வு பெறுவெனவே
பேரருளும் மொழிந்ததனால்

பரஞ்சோதி என்றான
சிறுதொண்டன் எனுமிவனே
சிவபெருமான் அருளாலே
சிவபதமே கண்டானே !

திருச்சிற்றம்பலம் !

53. அப்பூதியடிகள்

திங்களூர் அது தனிலே
திருத் தொண்டர் அந்தணராய்
திகழ்ந்த அப்பூதி அடிகள வர்
திருநாவுக் கரசர் அவர் பால்
தீராத பற்று டையர் !

திங்களூர் எனும் ஊரில்
நீர்ப்பந்தல் முதற் கொண்டு
தர்ம சாலை யாவினி லுமே
நாவ ரசர் பெயர் இட்டு

வீடு மக்கள் யாவ ருமே
வாகீ சர் அவர் பெயராலே
தான் போற்றி இருந் தாரே!

வாகீ சர் அவர் தாமே
திங் களூர் அது வணைந்து
இவர் பற்றி கேட்ட றிந்து
அவர் இல்லம் எழுந் தனரே!

தான் தினமும் தொழு தேத்தும்
திருத் தேவன் வாகீச ரவரை
திரு வாயில் தான் கண்ட
அப்பூதி அடிகள் அவர்கள் தான்

அப்பர் அவர் தாள் வணங்கி
அமுது செய்ய வேணு மென்றார்!

ஐயன் அவன் இசைந் ததுமே
அமுது உண்ண அடிய வர்க்கு
மூத்த மகன் தான வனை
திரு நாவுக்கரசு என் பவனை

வாழை இலை அரிவ தற்கு
அனுப்பி வைத் தார் இவர் தானே !

வாழை யிலை அரியுங் கண்
நாக மது தான் தீண்டி
உயிர் துறந்தான் அவனுந் தான் !

இது கண்ட இரு வருமே
இறப்பது இது தடை யெனவே

இல்ல மது அமுது செய்ய
இடை யூறு என வெண்ணி

இந்த ஒரு விஷயத்தை
இயம்பாது மறை வித்து
இனிய வரவர் அமு தூட்ட
இயல்பான நிலை கொண்டார் !

வாகீசர் அவர் தானே
அன்ன மது உண்ணுங்கால்
அன்பான அவர் பிள்ளையவன்
எங்கே என அவர் வினவியதும்

"இப்போது இங்கு அவன் உதவான்"
என்ற டிகள் மொழிந்த துமே
"ஆனதென்ன" என வாசீசர் அவர் கேட்க
ஆதி மகன் நாவரசு எனுமவனே

நாகமது தான் தீண்டி
நஞ்சுண்ட செய்தி யதை
கேட்ட தவசீலர் இவர்
ஆவது செய்வதென தான் கூறி

ஆதி சிவன் தாள் பணிந்து
அருட் பதிகம் தான் இசைத்து
திரு நாவுக்கசரசு எனு மவனை
திரு வருளும் பெறச் செய்து
உயிர்ப் பித்தார் திரு மகனார்!

திரு வருளர் அவர் மேலே
திரு உள்ளம் தான் கொண்ட
திரு வடியர் அப்பூதி யவரும்
இவரே தான் சிவ னென்று
இன் புற்று வாழ்ந் தாரே!

திருச்சிற்றம்பலம் !

54. அதிபத்த நாயனார்

அதி பத்தன் எனு மிவரே
அதீத பக்தி யதால்
அம்ப லவன் அரு ளோடு
அற நெறியில் வாழ்ந் திருந்தார் !

பரத குலம் தனிலுதி த்த
பரத வராம் இவர் தாமே
நாகை யது கடலோ ரம்
நாளு மது மீன் பிடித்து

தினமும் ஒரு மீன தையே
சிவனார் க்கு படைத் தளிக்கும்
சிறப்பான சீல னராம் !

மீன் தொழிலிற் இலாபமின்றி
நட்ட மது அடைந் தாலும்
நட்டம் புரிவா ரவர்க்கு
நாளு மது மீன தையே

நல் கிடும் நல் மனதை
நெறி யாக கொண்டி ருந்தார் !

வறுமை யதில் வாடி னுமே
தரும னான பரத ரிவர்
நாகை யதன் கடலி னிலே
நல்ல தொரு மீன் ஒன்று
தங்க மீனாய் வலை வரவே

ரத்தின மணி யது பொதித்த
பொன்னான மீன தையே
ஈசனவன் கழற்கே வென
நீர தனில் விட்ட தனால்

பாசமான ஈசருமே
நேச னவன் ஆட் கொண்டு
பாச த்துடன் காட்சி தந்து
பரம பதம் தந்த னரே!

திருச்சிற்றம்பலம் !

55. நீலகண்ட யாழ்ப்பாணர்

நீல கண்ட பாணர் இவர்
சோழ தேச நாட்டி னிலே
யாழி னிலே இன் னிசையில்
தேவ னவன் திருப் புகழை
நாளு மது இசைத் திடுவார் !

மனைவி அவள் தன் னோடு
மகேசன் அவர் துதி பாடி

பல தலமே சென்ற டைந்து
மதுரை யம்பதி வந்த னரே!

பாணர் குல பாடினியர்
பக்தி இசை யது கேட்டு
மெய் மறந்த சொக்க னவன்
பொற் பலகை ஆசன மிட்டு
யாழி சைக்க பிறப்பி த்தான் !

ஆருரன் அவன் தனுமே
பாணர் குல யாழி னரை
வேற்று வழி தான மைத்து
தனி வாயி லது அமைத்து
இசைத் திடவே ஆணை யிட்டான் !

ஞான மான சம்பந்த னவன்
நாத மான பாடல் களை
யாழி சைத்து பாடியே
நாட் களுமே தான் கழிய

திரு நல்லூர் பெரு மணத்தில்
சம்பந்தர் மண நாள திலே
பெருஞ் சோதி யது புகுந்து
பேரின்பம் பெற் றாரே!

திருச்சிற்றம்பலம் !

56. காரைக்கால் அம்மையார்

பெரிய புராணம் தான் பேசும்
அருமை யான மூவ ருள்ளும்
முதன்மை யான பெண் ணிவரே
முக் கண்ணன் அம்மை யரே!

காரைக்கால் நகர் தனிலே
வணிகர் குல மரபு தித்த
வடி வழகாம் புனித வதி
வன் மீகர் அவர் மேலே

வற் றாத பற்று டையர்!
பரம தத்தன் எனு மவரை
இல் லறமாய் தான் கொண்டு
இருந் திருந்த வேளை யிலே
கணவன் தந்த மாங் கனியை

சிவனடியர் அவர்க் களித்து
கணவர் அதை வினவு கையில்
ஈசனிடம் மாங் கனியை
பெற்றுத் தந்த நிகழ் வாலே

நேசர் அவர் இவள் தனையே
தெய்வ மென தான் எண்ணி
அவ ளையே தான் துறந்து
வேறு மணம் தான் கொண்டார்!

தெய்வமென தான் அவரை
திருப் பாதம் தொட்டு அவள்
திருவடி அவர் தொழுத தனால்
தான் கொண்ட இள உருவம்

தான துவே நீங்க வென்று
பேயுரு வம் அது கொள்ள
ஈச னையே வேண்டி நிற்க
ஈச னவன் கருணை யதால்
பேயு ருவம் தான் கொண்டு

ஈசனவன் கயிலை தனை
கால் களால் நடத்த லது
தகுதி யன்று ஒழிந்திருந்து
தலை யதனால் நடந்து செல்ல

மகேசனும் உள மகிழ் ந்து
"அன்பின் மகிமை யதனால்
இங்கே வரு கின்ற இவள்
நம்மை துதிக் கின்ற அம்மை"யென

உலகே உய்யும் பொருட்டு
"அம்மையே" என்ற ழைத்து
வேண்டும் வரம் வினவவே
"பிற வாமை வேண்டும" உனை

"மறவாமை வேண்டு" மென
வர மதுவே தான் கேட்க
சுவாமியும் அது கேட்டு
ஆலங் காடு அது சேர்ந்து

நடன மாடும் நிலை கண்டு
தூக்கிய திரு வடி கீழ்
துதி பாடும் வர மருளி
சிவா னந்த நிலை தனிலே

எப்போதும் இருக்கும் அந்த
பேரா னந்த நிலை யருளி
பொற் பதமே அளித் திட்டார் !

திருச்சிற்றம்பலம் !

57. திருநாவுக்கரசர்

திரு வாமூர் அது கண்ட
தேவார மூவ ரிவர்
திரு முறையே மூன்று கண்ட
மருள் நீக்கி எனு மந்த
தரும சேனர் இவர் தானே !

தமக்கை யவள் திலக வதி
தான் காட்டிய வழி யதனில்
சாக்கிய ரவர் வழி சென்ற
சாத கனாம் தரும சேனன் !

சூலை நோயது தாக்க
சூழ்ந்த வினை யது நீக்க
சூலன வர் திருவடி சேர்
திரு வதிகை வீரட் டானவர்

திருக் கோவில் அது தனிலே
திரு வெண்ணீற் றது பூசி
திருப் பதிகம் அது பாடி
திருச் சைவர் ஆயி னரே !

சமணனான பல் லவனும்
சைவரான இவர் தனையே
கடலில் கட்டி பாய்ச் சினுமே
நற்றுணை யாவது நமசி வாயமென

நல் மொழியே தான் கூறி
நல மாக கரை யேற
சமண வன் அவன் தனுமே
சைவ நெறி திரும் பிட்டான் !

என் கடன் பணி செய்வதென
சிவா லய பணி யதுவே
சிறப்பாக தாம் செய்து
உழ வாரத் தொண்ட னானார் !

திருத் தொண்டர் சம்பந்த ரவர்
திடமான நட்ப தனால்
திருமக னார் அவர் சேர்ந்து
தேவாரம் பல பாடி
திருக் கோவில் வலம் வந்தார் !

திருக் கோவில் பல சென்று
திருக் கயிலை காட்சி பெற்று
தொண்டன் அப்பூதி அடிகளரின்
திருச் செல்வர் நா வரசை
உயிர்ப் பித்து வர வழைத்தார் !

திருவீழிம் மிழலை யதில்
திரு வாளர் அருள தலால்
படிக் காசு தான் பெற்றார் !

இவ்வாறு பல் லாண்டு
பக்தி யதை பேணி நின்ற
பக்தர் இந்த அப்ப ரவர்
திருப் புகலூர் அது வணைந்து

திருப் பதிகம் அது பாடி
திரு வடியே சரண டைந்தார் !

திருச்சிற்றம்பலம் !

58.திருஞான சம்பந்தன்

தேவாரத் திரு மகனார்
திரு முறைகள் மூன் றிசைத்த
திருக் காழி அது கண்ட
திரு மகனார் தான் இந்த
திரு ஞான சம்பந்தன் !

சிறு பிள்ளை அகவையிலே
சீர் காழி குளக் கரையில்
சிறு பிள்ளை சம்பந்தன்
சிறு பாலன் அழுததனால்

சிவ னவரின் துணைவி யவள்
சிவ ஞானப் பால தனை
சிறு பிளளை சம் பந்தர்க்கு
சிறப்பாக அருளி யதால்

சிவ ஞானம் அது பெற்று
சிவ பாலன் ஆகி னனே !

தேவார மூவர் இவர்
திருக் கடைக் காப்பு செய்து
திருத் தலமே பல சென்று
திரு வருளும் போற்றி ருந்தார்!

பதிகங்கள் பல வற்றால்
பரமன வர் புகழ் பாடி
பரம சிவன் அவன் மகிழ்ந்து
பல்லக்கு குடை யென்று
பரிசுகளும் பல தந்தான் !

வீழிமலை அது சென்று
வறுமை யது நீங்கி டவே
"வாசி தீரவே காசு நல்குவீ"ரென
படிக் காசு தான் பெற்று
பஞ்ச மது நீக்கி னரே!

திரு நீற்று பதிக மதை
திரு ஞான மவர் பாடி
திரு மதுரை பாண்டி யரை
திரும்பச் செய்தார் சிவ நெறிக்கு!

திருத் தொண்டர் நாவரசர்
மேவிய பெரும் அன்பாலே
அப்பா என்றே அழைத்து
அப்பர் ஆனார் அவருந் தான் !

திருமயிலை திருத் தலத்தில்
திரு மகளாம் பூம் பாவை
திருச் சாம்பல் ஆனவளை
திரும்பச் செய்தார் உலகிற்கு!

திருநல்லூர் தான் அணைந்து
திரு மண மது நிகழ்வினிலே
திருச் சோதி யது புகுந்து
திருவடி தான் சென்ற ணைந்தார்!

திருச்சிற்றம்பலம் !

59.புகழ் துணை நாயனார்

சோழ நாட்டு சிற் றூராம்
செரு விலி புத் தூரில்
ஆதி சைவர் இன மதிலே
அவ தரித்தார் புகழ் துணையே !

அரிசி லாற்று நீர தனால்
அபி டேகம் தினஞ் செய்து
வாயி னாலே துதி பாடி
வந் தனமே தினஞ் செய்வார்
வானவர் கோன் அவருக்கே !

முதுமை யது வந் தாலும்
வறுமை யது கொண் டாலும்
முக் கண்ண னவர் தொழுவதற்கு
முறை யாது செய் திடுவார் !

பஞ்ச மது வந்த போது
பசி யோடு வாழ்ந் தாலும்
பரம னவர் பக்தி யதை
பாங்கு டனே செய்த தனால்

பரம சிவன் அவர் தனுமே
புகழ் துணை யவர் கனவதிலே
பொற் காசு தந்த ருளி
துன் பங்கள் தீரு மென
திருவாய் மொழி மலர்ந்த தனால்

தினமும் ஒரு பொற் காசு
படிக் காசு அது அளித்து
புகழ்த் துணையர் பஞ்ச மதும்
மக்க ளவர் வறுமை யதும்
தானு மது தீர்ந்த னவே !

படிக் காசால் பஞ்ச மதை
தீர்த்த இந்த நாய னரே
திருவடியில் கலந்த னரே !

திருச்சிற்றம்பலம் !

60. சுந்தர மூர்த்தி நாயனார்

திரு நெறியாம் சிவ நெறியில்
திருத் தொண்டன் நம்பி யவன்
திரு நாவலூர் எனு மூரில்
திரு வாளர் சடை யனுக்கும்

திரு மதி இசை ஞானிக்கும்
திரு மகனாய் பிறந் தவராம் !

திரு வழகு கொண் டமையால்
திங் களணி வேந்த னவன்
சுந் தரனே என அழைக்க
சுந் தரனார் என் றானார்!

திரு நாவல் குறு வேந்தன்
நர சிங்க முனை யரவர்
நல மோடு தான் வளர்த்த
நம்பி யவன் ஆரூ ரன் !

தோழன் எனும் உணர் வதிலே
தூய னவன் துதி பாடி
திருமணத் திற்கே தூது போன
திரு வாரூரன் தோழ மையில்

பரவையர் சங்கிலியர் என
இரு மணம் தான் கொண்டாரே
தம்பிரான் தோழன் எனும்
திருமகனார் சுந்தரனார்!

சங்கிலியர் அவர்க் களித்த
வாக்கு அது தவறியதால்
வன் மீகர் விளை யாட்டால்
விழி இழந்து போனாரே!

விழி இழந்து போனாலும்
விழி யென்று சங்கரரை
வழிபாடு செய்ததினால்
வழி பெற்றார் வினையாளர்!

சிவ னவரின் அடியவர் தம்
சிறப்பினை தான் சித் தரிக்க
சிவனவர் தம் இசை வோடு
திருத் தொண்டத் தொகை பாடி
திருவடிகள் சிரம் தாழ்ந்தார்!

ஏழாம் திரு முறை யென்று
தேவாரம் அது பாடி
சுந்தரர் தேவார மென
சுருதி யாற்றி பண் ணிசைத்தார்!

ஓலை யொன்று அது கொண்டு
ஆண்ட ருள் செய்த அம்பலவர்
ஆலயங்கள் பல சென்றார்!

சேர மானவர் நட்பு கொண்டு
சேர னவன் தான் சேர
சிவ னடியே அடை வதற்கு
சிவ னரவர் அரு ளாலே

வெள்ளை யானை மீதேறி
வட கயிலை யது சேர்ந்து
வானகரம் புகுந் தாரே!

திருச்சிற்றம்பலம் !

61..திருநாளைப் போவார் நாயனார்

திருத் தொண்டர் நந்தனராம்
திகழ்ந்த புனற் கொள்ளிடத்தில்
திசை மேல் நாட்டு ஆதனூரில்
திருமேனி தான் கொண்டு

திடமான சிந்தை யொடு
தேவர்பிரான் அர்ச்சனைகட்கு
திருவாயில் புறம் நின்று
தந்தொழிலாம் கோரசனை

தோல் போர்வை விசிவாரென்று
தந்தனைவார் தரமுடனே!

தம் பணிகள் செய்வதற்கே
திருத்தலங்கள் தினம் சென்று
திருவருளை உளம் பூண்டு
திருவாயில் முன் நின்று

திருவலமும் தான் கொண்டு
திருநடமும் தான் புரிவார்!

சித்தமெலாம் சிவனென்று
பக்தியுற பண் பாடி
இத்தன்மை ஈடேற
திருப்புன்கூர்ச சிவலோகன்

சேவடிகள் மிக நினைந்து
மருங்கிணைந்தார் அவ்வூரே!

நற்கதியும் தான் பெறவே
நல்வினைகள் மேலோங்க
நந்தனரும் நல்வாய்ப்பாய்
நாதனையே உற்றாரே!

மற்ற அந்தணர் போலே
உற்ற பெருஞ் சிவனாரை
பெற்றுக் களி எய்திடவே
பெருந்தடையே வந்தனவாம் !

தடையாக வந்துதித்த
திரு நந்தித் தேவரினால்
கடையாக தாம் நின்று
காட்சியதை கொள்ளாமல்
கலக்கமுமே தாம் கொண்டார்!

கலங்கிய இவர்நிலை கண்டு
தயங்கிய திரு நந்தியுமே
சற்றே விலகி இரு என்னும்
இறையவரின் திருவுளத்தால்

இடம் கொண்ட கோவில்புறம்
வலங் கொண்டு விலகினரே!

பொங்கிய பெருங் காதலினால்
பெருங் கருணை தெய்வத்தை
பொன்னபலந் தனில் சேவிக்க
பேராவல் தான் கொண்டார்!

உற்ற குலம் உளத்துதிக்க
இதுவொன்றே இடராக
தடையாக தான் நிற்க
மற்றொன்று இசைவன்றி

ஒரு நாளும் போகாது
நாளை போவேன் என
"திருநாளைபோவானார்!"

நாளும் செய்வதறியாது
நீண்ட பெருங் காதலினால்
தில்லை வராத தெண்ணி
அல்லல் பிறவி இதுவென
கண்ணோடு துயில் கொள்வார்!

இந்நிலை கண்ட ஈசனும்
எண்ணிலா கருணை கொண்டு
தன்னிடம் கொள்ள அவரை
தரிசனமே தந்தான் கனவில் !

இப்பிறவி போய் நீங்க
வேள்வியிடை தீ மூட்டி
அவருமதில் மூழ் கெழுந்து
முப்புரிநூல் மார்போடு
சேர்ந்தணைவாய் என்றாராம் !

தில்லைவாழ் அந்தணர்க்கும்
வேள்விதனில் எரியூட்ட
வேதம் உரை நாயகனும்
வேண்டுதலும் தான் விடுத்தான் !

தம் பெருமான் பணிகேட்ட
தவமறையோர் யாவருமே
எம்பெருமான அருள் கொண்டு
எரியும் தனை வேள்வியையும்
தவமாக தான் செய்தார்!

திருநாளைப் போவாரும்
மறையவர்கள் முன்னிலையில்
தென்திசையின் மதில் புறத்து
திருத்தில்லை திருவாயில் கைதொழுது

செந்தீ மேல் விழுந்தெழும்போது
அந்தணன் போல் உருக்கொண்டார்!

திருநாளைப் போவாரும்
மறைமுனிவர் ஆனதனால்
அந்தணரும் அதிசயித்தார்!
ஆர்ப்பரித்தார் அனைவருமே!

வந்தணைந்த திருத்தொண்டர்
மாசறுத்து வினையறுத்து
ஆசில் மறை முனியாகி
அம்பலவர் தாள் அடைந்தார்!

திருச்சிற்றம்பலம்!

62. பூசலார் நாயனார்

மனக்கோயில் கட்டி சிவபெருமானை பிரதிட்டை செய்த மறையவர்

உயரிய நெறி ஓங்கும்
உயர்பதி தொண்டை நாட்டில்
உளமகிழ் நிறை மூதூர்
உயர்மிகு திரு நின்றூரில் !

மறையோதும் குலந் தன்னில்
குறைவில்லா குண மெய்தி
நல் நெறி உள் அன்போடு
வந்துதித்தார் பூசலாரே!

சிவனே என் சிந்தையென
அன்பர்தம் அடியார்க்கு
ஏற்புடைய பொருளளித்து
ஏற்ற பணி இது வென்றார்!

திருக் கோவில் அமைத் திடவே
திருவுளமே தான் கொண்டு
பொருள் தேடிப் போகவுமே
பொருள் இல்லா நிலை கண்டார்!

வருந்திப் பொருள் தேடியுமே
வாராத நிலை யெண்ணி
போதாது நிதி யென்று
மன்னுமோர் பொருள் பேறின்றி

என் செய்வேன் என்று ரைத்து
நினைப் பினால் கோவிலொன்றை
நிலையாக நிறுவிடவே
நித்தமதை சிந்தித்து
மனக் கோவில் கட்டலானார் !

திருப்பணி சேர் சாதனமாம்
கல், மரங்கள் முதற் கொண்டு
தச்சர் பணி யாளரையும்
சிந்தனையிலே திரட்டிக் கொண்டார் !

நல்லதொரு நாள் பார்த்து
கோவில் பணி தொடங்கிடவே
இரவு பகல் துயிலாமல்
அடி முதல் உபான மென

பல வரிசை தானமைத்து
உரிய அளவு விமானமென
சிகரமும் அதன் மேற் கொண்டு
தூபியும் தான் நட்டாராம் !

சுதை வேலை தான் முடித்து
கோயிலினே கிணறு வெட்டி
திருக்குளம், மதில் வகுத்தமைத்து
எம்பெருமான் எழுந்தருள

வேளையுடன் நல் நாளையுமே
நலமாக குறித்தெடுத்தார்!

நெஞ்சகமே கோவில் என்று
நினைவே சுகந்தமாக
அன்பே மஞ்சன நீ ரென்று
பூசை கொளும் நாளன்றே

கச்சி ஏகம் பரந் தனிலே
காடவர் கோமான் எனுமன்னன்
மாடெல்லாம் சிவனுக் கென
மாடக் கோவில் தான மைக்க
மங்கள நாளாய் கண்டார்!

கொன்றை மலர் கொண்டருளும்
கங்கை மேவிய சிவனவனும்
இரவிடைக் கனவி லெய்தி
பூசன் அன்பன் நெடு நாளும்

நினைந்து செய்த ஆலயத்துள்
நாளை நாம் புகுவோமென
நாளொழிந்து பின் கொள்வா யென
மன்னரிடம் வந்து ரைத்து

மற்றுமொரு நாள தனில்
மாடக் கோயில் புகுவோ மென்றார்!

பல்லவனும் துயிலெழுந்து
இறைவன் உளமுவக்கும் வண்ணம்
பெரிய திருக் கோயில் கட்டும்

பெருந்தகையார் யாரென்று
காணச் சென்றார் நின்றூரே!

அங்குள்ள இடமணைந்து
திரு நின்ற ஊர் தனிலே
திரண்ட மக்க ளிடந்தனிலே
திருத்தொண்டர் பூசலாரும்

திறமாக தாம் அமைத்த
திருக்கோவில் எங்குளது
என்றே அவர் வின வினராம் !

அப்படி ஓர் கோவிலுமே
அங்கில்லை என்றே தான்
அவ்வூராரும் தான் சொல்ல
அவ்வூர் மறையவர் கண்

பூசலார் யார் என கேட்டு
மன்னவனும் அவரிடஞ் சென்று
தேவரவர் தாம் அமைத்த

திருக் கோவில் எங் கென்று
திகைப் புடன் தான் கேட்டாராம் !

ஆண்டவரும் தன் கனவினிலே
தன்னை ஸ்தாபிக்கும் நாளாக
பூசலாரின் நாளினையே
ஏற்றுரைத்த செய்தி தனை
அவரிடங்கண் உரைத்தாராம் !

மன்னர் உரை கேட்டன்பர்
தன்னையும் ஓர் பொருளாக் கொண்ட
எம்பிரானும் அருள் செய்த
நிதி இலாக் கோவிலான

மனக் கோவில் இது தானென்று
உளக் கோவில் பூண்டதனை
உளமார கூறி நின்றார்!

அரசனுமே அதைக் கேட்டு
அதிசயமே என்றெண்ணி
அன்பர் பெருமை இது வென்று
அடிதொழு வீழ்ந்து எழுந்தார் !

பூசலாரும் தாம் கொண்ட
உளக் கோவில் இடந்தனிலே
ஈசனையே ஸ்தாபித்து
பூசனைகள் பல செய்து

பல நாட்கள் பணி செய்து
பரகதி தான் உற்றாராம் !

திருச்சிற்றம்பலம் !

63.ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

தொண்டை நாட்டு திருப்பதியாம்
தொன்மை மிகு எழிற்பதியாம்
தண்மை மிகும் காஞ்சியிலே
தம்குல மர வழித்தோன்றி

வைய நிகழ் பல்லவராம்
ஐயடிகள் எனும் கோனார்
ஐயமிலா நீதி கொண்டு
தர்மநெறி தழைத் தோங்க
அரசு செய்யும் செங்கோலார் !

தாரணி மேல் சைவமுடன்
அருமறையின் துறை விளங்க
அரசளிப்பார் எந் நாளும் !

எவ்வுயிரும் பெருமை உடன்
இனிதாக வாழ்வ தற்கே
சைவ நெறி சமயமொடு
வட நூலும், தென் தமிழும்

ஆன கலை நூற்பணிகள்
செய்தளிப்பார் அரசாட்சி!

இறைப் பணிக்கு அரசாட்சி
இடையூறு எனக் கொண்டு
இந்த நிலை தான் மாற
இருந்த தன் எழில் மகனை

அரசனாக முடி சூட்டி
ஆனந்தமே கொண்டாராம் !

தொண்டுபல புரிவ தற்கே
அண்டர்பிரான் அமர்ந்த ருளும்

ஆலயங்கள் தான் சென்று
அடியார் பணி புரிந்தே
அழகு தமிழ் கவிதையிலே
வெண்பாக்கள் புனைவாராம் !

அவ்வாறே ஐயடிகள் தாம்
ஆலயம்தான் சென்ற பின்னே
அம்பலத்தான் ஊரணைந்தார்!

அம்பலவன் ஆடுகையில்
அண்டமதை தான் மறந்து
அளப்பரியா உவப்புடனே
அழகாக புனைந்தாராம்
அளவிலா வெண்பாக்கள் !

இவ்வாறே காடவர் கோன்
இணையில்லா தொண்டாற்றி
சிவனோடு சிவ மானார்
சிவ பதமும் அடைந்தாரே!

திருச்சிற்றம்பலம் !

64.தொகையடியார்கள்

திருத்தொண்டர்த் தொகை பாடும்
தொகையடியார் எனு மிவரே
சைவ மத மூலவனாம்
முழு முதற் கடவுளவன்

ஈசனையே வணங்கி நின்று
சித்தத்தையே சிவ னிடந்தான்
வைத்து வாழ்ந்து வந்தவராம் !

பண்பு, தோற்றம், செயல்வழியே
வகை படுத்த இவர் முறையே

1.தில்லை வாழ் அந்தணர்

தில்லை மூலாயிரம் இவர்
அம்பலத்தான் அடி போற்றி
ஆடல் வல்லான் பூசைசெய்து
ஆகமமும் வேதமுந் தான் பயின்று

அற நெறியில் தான் நின்று
அம்பலத்தான் அரசர் க்கே
அர்ப் பணித்தார் அவர் தமையே!

2.பொய்யடிமை இல்லாத புலவர்கள்

ஆலவாய் அரசன் அவர்
ஆண்டு றையும் மதுரையிலே
சங்கம் வளர் புலவர்களும்
கபிலர், பரணர் எனவென்று

நக்கீரரென வென்று நாற்பத்தொன்பது
புலவர்களும் என மற்ற வரும்
பொய் கெட்டு மெய்யான
இறைவனுக்கு அடிமை என

பொருள மைத்து பாடிய
பொய்யடிமை இல்லாத புலவர்கள் !

3.பத்தராய்ப் பணிவார்

சிவனடியர் உருவில் அவர்
எவர் வொருவர் வந்தாலும்
அவர் தமையே இறைவனென்று
சாதி, குலம் பார்க்காது

மேவி வரும் பக்தியதால்
தாள் வணங்கும் மாண்புடையர்
பத்தராய் பணிவார் இவரே!

4. பரமனையே பாடுவார்

தமிழ் மொழி அது வன்றி
ஏனைய மொழி யது தனிலும்
பரமனவர் ஈசன் ஒன்றே
பாட்டுடைத் தலைவன் என்றே
பாட்டி சைக்கும் பாங்காளர்!

5. சித்தத்தை சிவன்பாலே வைத்தார்

சித்தமது அலையா நின்று
அறம், பொருள், வீடு காணாது
அத்த னவர் அடி போற்றி
சித்தமதை சிவனில் வைப்பார்!

6. திருவாரூர் பிறந்தார்

ஆரூரில் பிறந்தோர் எல்லாம்
ஆதி சிவன் கணங்களென
ஆதி சிவன் அவராலே
ஆசி பெற்ற இவர்தாமே
பேறு பெற்ற பெருமையரே!

7. முப்போதும் திருமேனி தீண்டுவார்

எம்பெருமான் மேனி யதை
தீண்டி ருந்து குளித்து வித்து
தூப தீபம் யாவும் செய்து
பூசை யதை தினம் செயும்
ஆதி சைவ பிராமணர் தாம்
திரு மேனி தீண்டுவாரே!

8. முழு நீறு பூசிய முனிவர்

உடல் பிணி உயிர் பிணி யதனை
போக்கும் அந்த சிவனவரின்
சின்னமான திரு நீறதனை தான்
முழுமையாக உடல் பூசி நிற்கும்
முனிவர் இந்த சிவனடியர் !

9. அப்பாலும் அடி சார்ந்தார்

கால, இட, தேசத்தால்
அப்பால் நின்றும் சிவன் அவரை
தாள் வணங்கி பணி செய்து
அடிதனையே போற்றி செய்யும்
அடி சேரும் இவர் தானே
அப்பாலும் அடி சார்ந்தார்!

இவ்வாறே நாயனரும்
தொகையடியர் ஒன்பதரும்
சிவனவனின் சித்தங் கொண்டு
சிறப்புற்று வாழ்ந்தாரே!

திருச்சிற்றம்பலம் !
மஹா பெரியவா சரணம் !

01 .மாணிக்க வாசகர்

செந் தமிழும் சிவ மணமும்
சிறந் தோங்கும் பதியது வாம்
சிறப்பான பாண்டி நாட்டில்
சிறப்பான திரு மகனார்

சீரிய திரு வாத வூரர்
செவ் வனமே வாழ்ந் திருந்தார் !

வேதநெறி கற்று ணர்ந்து
ஆகமங்கள் அறிந்துணர்ந்து
அரி மர்த்தன மன்னனவன்
அவை யதனில் அமைச்ச ரென
அழகாக அணி செய்தார் !

அரச னவன் ஆணை தனில்
குதிரை யது பெறு வதற்கு
பொன் பொருளும் தான் பெற்று
மதுரை யது தான் நீங்கி
திருப் பெருந்துறை அணைந் தாரே !

திருப் பதியது போந்த துமே
திரு வருளது ஆட் கொண்டு
திரு ஞான குரு அவரை
திரு வாத வூரரிவர்

திருக் குருந்த மரத்தடியில்
திருக் காட்சி கொண்டனரே !

திரு வருளர் நினை வதனில்
திரு வருளில் நினைந் தொழுகி
திருப் பதிகம் பாடிய தால்
திரு மறையர் அவருந் தான்

திரு மணி யான பாடலதை
திரு வூரரிவர் இசைத் தமையால்
மணி வாசகர் என விளித்து
திருப் பயனும் தான் தந்தார் !

கை கொண்ட பொரு ளணைத்தும்
பெருந் துறையார் கோவில் கொள்ள
பெருஞ் செலவே செய்தமையால்
அர சனவன் ஆணை யேற்று

இறைவனது திரு முகமாய்
ஆவணி மூல நாள தனில்
குதிரை வரும் என் றுரைக்க
அந் நாளும் வந்த போது

சிவன வரே நரிகள் யாவும்
பரிகளாக தாம் மாற்றி
சேவ கனாய் தாமு மாக
மதுரை யது வந்த னனே !

பரியதுவும் நள் ளிரவில்
நரி களாக தான் மாறி
உரு மாறி ஊளையிட
தடு மாறி தான் நின்ற

பாண்டி யரின் அரச னுமே
துன்ப மேவி தண்டித்து
துயர் தந்தான் வாச ரவர்க்கு !

துயர் கண்ட வாசரவர்
துன்ப மது தான் கண்ட
இயற்கை யது சீற்ற மாக
வைகை அது ஆற துவே
வெள்ள மாக பெருக் கெடுத்து

ஈச னவன் அடியன் என
வந்தி யம்மை கிழவிக்கு
உடைப் படைக்க வந் திருந்து
பிட்டுக்கு மண் சுமந்து
கூலி வேலை தான் செய்தான் !

வேலை யது பார்க் காமல்
தூங்கும் அடிய னவன் கண்டு
மன்ன னவன் தான் வெகுண்டு
பிரம் படி தான் அடிக்க

அவ் வடியே அரசன் முதல்
அனைத்து உயிர் ஈறாக
அடி தனையே உணர்ந்தமையால்
அடியவனே ஆண் டவன் என
அனை வருமே உணர்ந் தனரே !

மன்னவனும் மகேச னவன்
மாட்சி தனை தான் அறிந்து
மணி வாசகர் தான் வணங்கி
மன்னித் தருள வேணு மென்றார் !

அவன ருளாலே அவன் தான்
வணங்கி இந்த வாசகர் தான்
திரு வாசக மது இயற்றி
"பாவை பாடிய வாயால் கோவை
பாடுக" என மொழி யேற்று

சிற்றம் பலக் கோவை பாடி
திருவாசகம் அது தனையே
மணிக ளிவர் மொழிய கேட்டு
இறை வனவர் அந்தணராய் வந்து
ஏட்டில் எழுதி வைத்த னரே !

அங் கிருந்து பின் சென்று
பல தலமும் தரி சித்து
திரு வருளை பாடி நின்று
தில்லை யது வந்த டைந்து
திருச் சிற்றம்பல இறை யோடு
இரண் டறதான் கலந் தனரே !



திருச்சிற்றம்பலம் !